திராவிடநாடு

1—7—62 | வார வெளியீடு | விலை [illegible]

தடையென்ன கண்டீர்.

—['பொன்னகர்' மாணிக்கம்]—

தடையென்ன கண்டீர்?—தணியாத
தாகத்திலே சுதந்திர மோகத்தினால் அன்று
(தடையென்ன)

படையினைக் கண்டீர்—அடக்கும்
படையினைக் கண்டீர்—கண்டும்
உடைந்ததா நெஞ்சம்? அடைந்ததா அச்சம்?
(தடையென்ன)

சிறையினைக் கண்டீர்—அடைத்த
சிறையினைக் கண்டீர்—கண்டும்
குறைந்ததா மோகம்? மறைந்ததா தாகம்?
(தடையென்ன)

குண்டினைக் கண்டீர்—பாய்ந்த
குண்டினைக் கண்டீர்—கண்டும்
சென்றதா வேட்கை? வென்றதா ஆட்சி?
(தடையென்ன)

விடுதலை கண்டீர்—இந்திய
விடுதலை கண்டீர்—அதுபோல்
விடுதலை கொடுப்பீர்; கெடுதலை விடுப்பீர்!
(தடையென்ன)

நீயேற்றதே தொண்டு

★ கனகு ★

சென்ற இதழ் தொடர்ச்சி...

"நானும் கழுகுமலையும் பணியாற்றும் இந்தப்பேரூர்திசென்ற ஆண்டு முழுதும் ஒரு காதற் கூடமாகத்தான் திகழ்ந்தது. ஐயை என்ற ஒரு பெண் இந்தப் பக்கம் வேலையாக இருந்தாள். அவள் சொல்லிவைத்தாற்போல் எங்கள் வண்டியிலேயே தினம் தினம் வந்து வந்து ஏறுவாள். அந்தக் கொடுமைக்காரி எப்படியோ கழுகுமலையை மயக்கிவிட்டாள். அப்பப்பா! அவளைப் பார்த்துவிட்டால் தான் இவனுக்கு எவ்வளவு மகிழ்ச்சி! எத்தனை குதூகலம்! அவள் பேச்சை எடுத்துவிட்டாலேபோதும். இவன் கிறங்கிப்போய் நிற்பான், அப்படியே இன்ப வெள்ளத்தில் மூழ்கிப் போய்க் கிடப்பான்.

இந்த ஓராண்டுக்காலமும் இந்தப் பையனும் அந்த ஐயையும் பேசிக்கொண்ட பேச்சுக்கள், நெருங்கிப் பழகிய பழக்கம், கலந்து உறவாடி நடந்துகொண்ட முறைகள்—எல்லாவற்றையும் வைத்து ஆயிரம் காதற் கதைகள் வரையலாம், பதினுயிரம் காதல் உரையாடல்களையாக்கலாம், ஆயிரமாயிரம் காதற் காட்சிகளை எடுக்கலாம். ஆனுல்,

அந்தப் பழக்கம், அந்த நட்பு, அந்த நேசம், அந்த உறவு—அத்தனையும் கணப்பொழுதில் தரைமட்டமாகிவிடும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. யாருமே எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்.

எத்தனை ஆசை வைத்திருந்தான் இந்தப் பையன் அவள்மீது; தன் உயிரையும், உடலையும், உணர்வையும் அந்தப் பெண்ணிடமல்லவா காணிகையாக்கிவிட்டுக் களித்திருந்தான். அந்த மோசக்காரி எல்லாவற்றிலும், கண்மூடிக் கண் திறப்பதற்குள மண்வாரிப் போட்டுவிட்டாளே! அந்த மாயக்காரி இவன் எண்ணத்தை, இன்பத்தை, ஆசையை ஆக அவ்வளவையும் படுசூரணமாக்கிவிட்டாளே!"

"ஏன்? அவள் இவனை விட்டுவிட்டு வேறு யாரையாவது...?"

"ஏவனே ஒருத்தன், அவள் அலுவல் பார்க்குமிடத்திற்கு மேலதிகாரியாக வந்தாஞம்! அலுவலுக்கு மேலதிகாரியாக வந்தவன், அவள் வாழ்க்கைக்கே மேலதிகாரியாக விரும்பினுனும். அதை அவளிடம் சொன்னுனும். அவன் சொன்னதும் அவள் அப்படியே அதை ஒப்புக்கொண்டுவிட்டாளாம். ஏற்றுக்கொண்டுவிட்டாளாம். இப்போது திருமணம்கூட ஆகப்போகிறதாம்!"

"ஆமாம், இவ்வளவையும் கழுகுமலை அந்தப் பெண்ணின் வாய்மொழி மூலமாகவே கேட்டறிந்துகொண்டுவிட்டானு?"

"என்ன இப்படிக் கேட்கிறீர்கள் நீங்கள்? விவரம் தெரிந்த நீங்களே இப்படிக் கேட்கிறீர்களே! இந்த மாதிரி செய்திகளையெல்லாம் வாயால் கேட்டேதான் தெரிந்துகொள்ள வேண்டுமா என்ன? நடப்புகளைப் பார்த்தாலே எல்லாம் தானே புரிந்துபோய் விடுமே!"

"இல்லை,—கண்ணுல் பார்ப்பதும் பொய், காதால் கேட்பதும் பொய... என்று பழமொழிகூடச் சொல்வார்களே, அப்படி அவசரப்பட்டு ஏதாவது ஒரு முடிவுக்கு வந்துவிடக் கூடாது பாருங்கள்."

"கண்ணுல் பார்த்ததுமட்டுமல்ல; காதால் கேட்டதுமட்டுமல்ல. மெய்க்கு மெய்யாக, நடப்புகளைப் பார்த்து, விசாரித்துத் தெரிந்துகொண்டுதான் சொல்லுகிறேன். அதுதான் பாருங்களேன். இப்போது ஒரு பத்து நாட்களாக அந்தப்பெண் எங்கள் வண்டியில் வந்து ஏறுவது கிடையாது. கண்ணில் தென்படுவதும் இல்லை—ஒரே ஒரு தடவையைத் தவிர. அந்த ஒரு தடவையுங்கூட அந்தப் பெண் எப்படி வந்தாள் தெரியுமா? அவள் புதிதாக வரித்துக்கொண்டிருக்கிருளே மாப்பிள்ளை, அந்த மாப்பிள்ளையோடு இணையாக வந்து வழியில் நின்ருள். அதைப் பார்த்தபோது எனக்கு எப்படியிருந்தது தெரியுமா? அப்படியே அவர்கள்மீது வண்டியை ஏற்றிவிடலாமா என்றுகூட எண்ணினேன்.

அந்தப் பெண்தான் வண்டியை நிறுத்தக் கைகாட்டினுள். வண்டியில் இடமும் இருந்தது. நான்வண்டியின் வேகத்தைக் குறைக்காமலே வயிற்றெரிச்சலோடு எதிரேயிருக்கும் நிலைக்கண்ணுடி மூலமாகப் பின்னுல்பார்த்தேன். கழுகுமலை எழுந்து நின்றுகொண்டிருந்தான். அந்த இடம் வாடிக்கையாக ஐயைவந்து வண்டியில் ஏறுமிடந்தானே! எப்போதும்போல் வண்டி அந்த இடத்தைத் தொலைவிலிருந்து நெருங்கிக்கொண்டிருக்கும்போதே எதிரே பார்த்துக்கொண்டுதானே வந்திருப்பான் அவன்! நான் பார்த்ததுபோல் தானே அவனும் அந்தப் புதிய ஆளோடு சேர்த்துப் பார்த்திருப்பான், ஐயையை!—என்னையே அந்தக் காட்சி அளவு மீறிய வயிற்றெரிச்சலுக்கும், ஆத்திரத்துக்கும் ஆளாக்கிவிட்டதென்ருல், கழுகுமலையை அந்தக்காட்சி என்னபாடு படுத்தியிருக்கும்! அந்தவேளை அவன் முகத்தைப்பார்க்கவே என்னுல் முடியவில்லை.

வண்டியை நிறுத்தவில்லை நான். கழுகுமலைக்கு என் செயல் வியப்பைத்தான் அளித்திருக்கும். எனினும் அவன் பேசவில்லை, எதிரே வெறித்துநோக்கியபடி தன்னையும் தன் சுற்றுச் சூழ்நிலையையும் மறந்து நின்றுகொண்டிருந்தான் அவன். வண்டியிலிருந்தோர்க்கெல்லாம் எங்கள் செயல் வியப்பைத்தான் அளித்திருக்கும். அன்று எங்கெந்த இடத்தில் நிறுத்தினேன், எங்கெங்கே நிறுத்தவில்லை என்பது எனக்கே தெரியாது. நேரே முடிவிடம் வந்தது. நிறுத்தவேண்டிய இடத்தில் வண்டியை நிறுத்தினேன். யாருடனும் பேசவில்லை. இறங்கி என்பாட்டில் போய்விட்டேன். என் நிலையே இப்படியென்ருல், கழுகுமலையைப்பற்றி எப்படி விவரிக்கமுடியும்! அவனைப் பார்ப்பதற்கே என் மனம் துணிவுகொள்ளவில்லை. அன்றைப் பொறுததவரையில் வண்டியில் வந்த பிரயாணிகளோ, வாடிக்கையாக எங்கள் வண்டியிற் பயணம் செய்கின்றவர்களோ, அல்லது வழியிலே வண்டியை நிறுத்த முயன்றவர்

(4ம் பக்கம் பார்க்க

நோயாளிக் குழந்தை

மலர் 20] ஆண்டு சந்தா ரூ. 8 (1—7—62) தனிப்பிரதி 16 காசு [இதழ் 4

"இந்தியத் துணைக் கண்டத்துத் தொழில்களில் ரூர்க்கேலா உருக்காலைத் தொழில் ஒரு நோயாளிக் குழந்தை" என்று வருணிக்கப்படுவதுபற்றிக் குறிப்பிடும்போது "இந்த நோயாளிக் குழந்தையைச் செழுமைமிக்கதாகவும், உடல் நலம் நிறைந்ததாகவும், இங்குள்ள எல்லாத் தொழில்களிலும் சிறப்பு வாய்ந்ததாகவும் மாற்றுதற்கான எல்லா முயற்சிகளிலும் முழு மூச்சாக ஈடுபட்டிருக்கிறோம்" என்று டெல்லிக் கனரக அமைச்சர் கனம் சுப்பிரமணியம் அவர்கள் கூறியிருக்கிறார்.

ரூர்க்கேலா உருக்காலையின் தொடக்க காலந் தொட்டு, அங்கே ஒன்று செய்யப்படுவதும், பிறகு— அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்போரின் திறமைக் குறைவும், அசட்டையும் சேர்ந்து — செய்துவிட்டதில் பழுது ஏற்படுவதும், அந்தப் பழுதைத் திருத்த முனையும் முயற்சியில் கோடிக்கணக்கிலே பணத்தை வாரியிறைப்பதும் ஆக இப்படித் திரும்பத் திரும்ப வாரியிறைக்கப்படும் கோடிக்கணக்கான பணத்தில் தென்னகத்து மக்களின்—தங்கள் தேவைகளை அரிதில் முயன்றுகூடப் பெறமுடியாத நிலையிலிருக்கும் மக்களின் வரிப்பணமும் நிறைந்த அளவு சேர்ந்திருக்கிறது என்பதை எண்ணும்போது நம்மால் வருந்தாமல் இருக்க முடியவில்லை.

இப்படி, பிள்ளை பிழைப்பதற்கு வழியுள்ளதோ, இல்லையோ, எள் என்பதற்கு முன் எண்ணெயாக இயங்கிக் கண் மண் தெரியாமல் தன்னுடைய பகுதிக்குச் செலவு செய்துகொண்டு போவதில் விரைவு காட்டுவதையே தன்னுடைய கொள்கையாக்கிக்கொண்டு செயற்படுகிறது தில்லி அரசு. அந்த அரசின் அமைச்சு நாற்காலியில் அமர்ந்திருப்பவர் யாராயிருப்பினும் வடபகுதியின் நன்மையையன்றிப் பிறிது எதையும்—அவர்கள் விரும்பினாலும் — செயற்படுத்த முடியாது என்பதை இப்போதைய சிலபல நிகழ்ச்சிகள் திரும்பவும் மெய்ப்பித்துக் காட்ட முன்வந்து நிற்கின்றன.

குறிப்பாக நாம் பலகாலும், பலபடியாக அரிதின் முயன்று எடுத்துச் சொல்லி எடுத்துச் சொல்லியே எதையும் அருமையாகப் பெறவேண்டிய நிலையில் உள்ளோம் என்பதற்குச் சேலத்து இரும்புத்தாதுபற்றிய செய்தி நல்லதொரு எடுத்துக்காட்டாகும். சேலத்தில் இரும்புத் தாது உள்ளதா என்ற விசாரணையை அரசு தொடங்குவதற்கான வேலையில் ஈடுபட்ட காலந் தொட்டு ஆங்கு கிடைக்கும் இரும்புத் தாது செர்மனிக்கும், நார்வேக்கும், சாம்செட்பூருக்கும் அனுப்பி வைக்கவும், ஆங்காங்கே சோதனையிடவும், அந்தச் சோதனைகளின் விளைவாகக் கிடைத்த பூர்வாங்க அறிக்கைகளை உறுதி செய்யவும் ஆன ஒவ்வொரு கட்டத்திலும் தென்னகத்தார் டெல்லியரசிடம் கேள்விகள் பல கேட்கவும், கோரிக்கைகள் விடுக்கவுமான செயல்களில் இடைவிடாது ஈடுபட்டு வந்தே இன்றைய நிலையை உருவாக்கியுள்ளனர்.

இன்னும், — இங்கே கிடைக்கும் இரும்புத்தாது சிறந்தது, நெய்வேலி நிலக்கரியைக் கொண்டு இரும்பு தயாரிப்பது இயலக் கூடியதே என்பது அறுதியாகத் தெரிந்த பின்னும், மேலும் ஆகவேண்டிய வேலைகள் மிகவும் மந்த நிலையிலேயே நடைபெற்றுக்கொண்டு போகின்றன.

இப்போது மேற்படி உருக்காலை சேலத்திலா நெய்வேலியிலா என்ற பிரச்சினையில் காலத்தைக் கடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

சேலத்திலா, நெய்வேலியிலா அல்லது இரண்டு இடங்களிலுமா என்ற இந்தச் செய்தியிலாவது தொடர்புள்ள தொழில் நுட்பக் குழுவினர் விரைந்தொரு முடிவுக்கு வருமாறும், ஏற்ற இடத்தில் — சிக்கல் நீக்கி— உருக்காலை நிறுவுமாறும் ஆகிய நடவடிக்கைகளில் தில்லியரசு வழக்கப்படியான மந்தப் போக்கை மாற்றிக்கொண்டு ஈடுபடுமா?

அல்லது எங்கள் நோயாளிக் குழந்தைக்கு எண்ணெய்ச் செலவு செய்வதைவிட உங்கள் பாலில்லாக் குழந்தைக்குப் பால் வாங்கிக் கொடுப்பது எங்கள் முக்கியமான வேலையல்ல என்ற போக்கில்தான் நடந்துகொள்ளுமா? பொறுத்திருந்து பார்ப்போம்!

*

வருந்துகிறோம்

பழம்பெரும் தன்மான இயக்கத் தலைவியும், இந்தி எதிர்ப்பு முன்னணி வீராங்கனையுமாகப் பணியாற்றிப் புகழ்பெற்ற நமது மூதாட்டி மூவலூர் இராமாமிர்தத்தம்மையார் அவர்கள் தமது 80-வயதில் இயற்கை எய்தி விட்டார்கள் என்ற தாங்கொணாச் செய்தி கேட்டு வருந்துகிறோம்.

அம்மையார் அவர்களின் பிரிவால் வருந்தும் அனைவருக்கும் நமது ஆறுதல் மொழிகளை உரித்தாக்குகிறோம்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

களோ, எல்லாவற்றிற்கும் மேலாக வண்டியில் நடுநடுவே வந்து ஏறிப் பிரயாணிகளையும், சீட்டுகளையும் சரிபார்க்கும் பார்வையாளர்களோ, எங்களைப்பற்றி என்னவிதமான குற்றச்சாட்டுகளைக் கொண்டுவந்தாலும், அவற்றை எங்களால் மறுத்திருக்கவே முடியாது. ஆனால், நல்ல வேளையாக, சொல்லிவைத்தாற்போல் யாருமே எங்களைப்பற்றி எந்த முறையீடும் செய்யவில்லை.

நான்கு நாட்களுக்கு முன்தான் அப்படி அந்த நிகழ்ச்சி நடந்தது. அதன் பிறகு கழுகுமலை யாருடனும் கலகலப்பாகப் பேசாமலேதான் இருந்தான். தன்னை வந்து ஆட்படுத்திக்கொண்டுவிட்ட பேரதிர்ச்சியிலிருந்து விடுபட முடியாதவனாகத்தான் இருந்தான். எனினும் தன் வேலைகளை ஒழுங்காக நிறைவேற்றிக்கொண்டுவந்தான். ஆனால், இன்று அவன் அடைந்துவிட்ட பேரதிர்ச்சி அவனை இவ்வளவுதூரம் நிலைகுலையச் செய்துவிடும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. தொடக்கத்திலிருந்தே அவன் செயல்கள் ஒவ்வொன்றையும் நான் பார்த்துக் கொண்டுதான் வந்தேன். ஆனால் திடீரென்று அவன் வண்டியிலிருந்து குதித்துவிடுவான் என்று நான் எதிர்பார்க்கவில்லை. வண்டிசேருமிடத்தை அடைந்ததும் நேரே அலுவலகத்துக்குப்போய் ஒருமாத விடுமுறை வாங்கிக்கொடுத்துக் கழுகுமலையை நேரே வீட்டுக்கு அனுப்பி வைத்துவிடவேண்டும் என்றுதான் எண்ணிக்கொண்டுவந்தேன். ஆனால் இந்தப் படுபாவி என்னை முந்திக்கொண்டுவிட்டான். வீட்டுக்குப் போவதைவிட வேறெங்கோ போவதற்குத் துடித்துக்கொண்டு நின்று, அதைச் செயலாக்கியும் காட்டிவிட்டான்."

கடைசி வாக்கியங்களை அந்த ஊர்தியோட்டி கூறியபோது அவரால் பேசவே முடியவில்லை. வேதனை முழுதும் ஒன்று திரண்டு அவருடைய குரலில் அளவுமீறிய தழுதழுப்பை உண்டாக்கிவிட்டது. அவர் கண்களிலிருந்து கண்ணீர் துளிர்த்து வீழ்ந்தது. அதைப்பார்த்து என் கண்களிலும் நீர் முட்டியது. என் பார்வையை மறைத்த கண்ணீர் அவர் தோற்றத்தையே மங்கலாக்கிக் காட்டிற்று. கண்களைக் கைக்குட்டையால் துடைத்துக்கொண்டு நான் பேசினேன்:

"எந்தவொரு செயலிலும் சிலர்—இருளையே முடிவாக வைத்து எண்ணப் பழகியவர்கள் இருக்கிறார்கள். அப்படி எண்ணப் பழகியோர் எந்த எளிய செயலிலும் வெற்றியைவிடத் தோல்வியையே அறுதியாக வைத்துச் சிந்தனையை ஓடவிடுவார்கள். அப்படி ஓடுகின்ற சிந்தனை வறிதான வருந்துதலுக்கு அவர்களை இழுத்துக்கொண்டு சென்றுவிடும். பிறகு எந்தவித அடிப்படையுமின்றி வருந்தித் தவிப்பதே அவர்களுடைய வேலையாகிவிடும். அத்தகையோரிடம் எப்போதுமே நெஞ்சில் உரமிருந்து காணமுடியாது. எதிலுமே துணிவிருந்து காணமுடியாது. ஒன்றை ஆற்றினார்கள்; முடித்தார்கள்; — அந்தச் செயலில் தோல்வி கண்டார்கள்; அல்லது வெற்றி பெற்றார்கள் என்று எதையாவது எடுத்துச்சொல்ல,அல்லது அவர்களோடு வைத்துப் பார்க்க ஒன்றுமே இராது. இத்தகையோரைப் பற்றி உலகும் ஒன்றுமே அறிந்திராது. அதேபோல் உலகத்தை அறிந்துகொள்ள அவர்களுக்கும் வாய்ப்போ வழியோ எவ்வாற்றாலும் கிட்டியிராது. அவர்கள் உலகத்தின்கண் முன்தான் உலவுகிறார்கள். எனினும் உலகறியாப் பெரும்பான்மையாக உலவுகிறார்கள். உலகத்தை அவர்கள் தெரிந்து கொள்வதில்லை. அவர்களையோ உலகம் இருந்தும் இல்லாதவர்களாக்கிக் காண்கிறது. இவ்வகையைச் சார்ந்தவன் அல்லன் கழுகுமலை. அவன் துடிப்பானவன், துணிச்சல் மிக்கவன். ஆற்றல் உள்ளவன். அறிவுக் கூர்மையும் உள்ளவன். ஆனால், "எதிலுமே அவன் வெற்றியைத் தவிர வேறு எதையும் கருதுவதில்லை. வேறு எதையும் காண்பதில்லை எடுத்ததில் எல்லாம் வெற்றி. தடையற்ற வெற்றி. உறுதிபடுத்தப்பட்ட வெற்றி என்று எண்ணுபவன். அதாவது எண்ணுவதில் எல்லாம் அளவுமீறிய ஒளியைக் காணும் வகையைச் சார்ந்தவன் கழுகுமலை.

எந்தச் செயல் முடிவிலும் இருள் நிறைவையே கற்பனை செய்து பார்ப்பவன் எப்படித் தளர்ச்சியுற்று, அயர்வு கண்டு தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்வோனாகிவிடுகிறானோ, எப்படி அவன் எதிலும் பயனற்ற தன்மையை, பயனற்ற நிலையை எய்தி மூலையில் தள்ளப்பட்டு விடுகிறானோ, அப்படி, அவன் சென்றடையும் நிலையைத்தான், முடிவைத்தான் எந்தச் செயலிலும் அளவு மீறிய ஒளியைக் காண்பவனும் சென்றடைகிறான்.

"காரிருள், எதையுமே பார்க்கமுடியாத நிலையை உண்டாக்கிக் கண்களைக் கட்டிப்போட்டு விடுகிறது. அந்தக் காரிருளில் சிக்கியவன் வழியறியமாட்டாத குருடனாகித் தவித்துக் கிடக்கிறான்; மாழ்கி மாய்ந்து போகிறான். அவ்வாறு தான் அளவு மீறிய பேரொளிக்கு ஆட்பட்டவனும்; அந்தப் பேரொளி அவன் பார்வையைப் பறித்துவிடுகின்றது. அவனும் குருடனாகிவிடுகிறான். அந்தப் பின்னவனின் நிலையைத்தான் இன்று கழுகுமலை ஓரளவு அடைந்திருக்கிறான். ஏன் ஓரளவு என்று சொல்கிறேன் என்றால், பாவம், கழுகுமலை ஏமாற்றத்துக்கு காளாகியிருக்கிறான். முழுக்க முழுக்க அவன் ஏமாற்றத்துக்குப் பலியாகிவிடக் கூடாது என்றே இன்னும் நான் எதிர்பார்க்கிறேன். அதோடு,

"தன்னைத் தேற்றிக்கொள்ளும் ஆற்றலைக் கழுகுமலை பெறவேண்டும். அந்த ஆற்றலை அவன் பெறுவான். அது அவனை அடிமைப் படுத்திய ஏமாற்றத்தைத் துரத்த உதவும். அவன் மீண்டும் பழைய வன் ஆவான்! ஆகவேண்டும் என்பது என் ஆசை" என்று நான் முடித்தபோது, அந்த ஊர்தியோட்டியின் கண்களில் ஒரு ஒளி பரவுவதை நான் பார்க்கத் தவறவில்லை. அவர் சொன்னார்:

"நீங்கள் சொல்வதைப் பார்த்தால் கழுகுமலை குணம் பெற்றுவிடுவான்; அவன் உயிருக்கு ஒன்றும் பேரூறு இல்லை என்று எதிர்பார்க்கிறீர்கள். நீங்கள் அப்படி எதிர்பார்ப்பதன் மூலம் உங்களை மறந்து அளவு மீறிய பேரொளிக்கு நீங்கள் ஆட்பட்டுவிடுகிறீர்கள் என்றுதான் நான் நினைக்கிறேன்."

அவர் வார்த்தைக்கு என்னால் மறுமொழி சொல்ல முடியவில்லை, சிறிது நேரம் பேசாமல் நின்றேன். பிறகு மெல்லத் திரும்பி கழுகுமலை கிடத்தப்பட்டிருந்த மருத்துவ அறைக்குள் சென்றேன். அங்கே கழுகுமலையைப் பார்த்தபோது 'ஊர்தியோட்டி சொன்னது சரிதானா? நானும் அளவு மீறியஒளியைத்தான் காண்கிறேனா? நான் எதிர்பார்ப்பதுபோல்...' ஐயப்பாடு என்னைக் குழப்பியது; அலைக்கழித்தது. அந்தக் குழப்பத்தோடு அலைக்கழிப்போடு ஊர்தியோட்டியிடம் சொல்லிக்கொள்ளாமலே திரும்பிவிட்டேன்.

(தொடரும்)

காஞ்சீபுரம்

1—7—'62.

தம்பி !

தில்லிக்கு மறுபடியும் சென்றிருந்தேன்—திரும்பியும் வந்திருக்கிறேன்—மீண்டும் ஆகஸ்டு திங்களில் செல்ல இருக்கிறேன்.

இது ஒரு பெரிய செய்தியா? என்று கேட்பார்கள், காங்கிரஸ் வட்டாரத்தினர். நிச்சயமாகப் பெரிய செய்தி அல்ல—முக்கியமான செய்திகூட அல்ல; ஆனால் காங்கிரசில் ஈடுபட்டு அமைச்சர் வேலை பார்க்க அழைக்கப்பட்ட அஞ்சா நெஞ்சுடையவர், தம்மைத் தவிர மற்ற யாவரும் நோஞ்சான்கள் என்று எண்ணிக்கொண்டு நான் தில்லியில் பேசிவிட்டு உடனே திரும்பிவிட்டேன்—இரயிலில் வந்தால் என்ன ஆகுமோ என்று பயந்துகொண்டு விமானம் ஏறி வந்துவிட்டேன் என்று பேசி, நான் தில்லி சென்று வருவதையே, மேடையிலே ஆராய்ச்சி செய்து காட்டித்தீரவேண்டிய ஒரு செய்தியாக்கிவிட்டாரே, நான் என்ன செய்ய!! அதனால்தான், நான் மறுமுறையும் தில்லி சென்றேன்—பேசினேன்—அமைச்சரின் பதிலுரை கேட்டேன்—மற்ற உறுப்பினர்கள் பேசக் கேட்டேன் — மேலும் இரண்டோர் நாள் அங்கு இருந்தேன் — திரும்பி வந்திருக்கிறேன்—இரயிலில்—யாரும் எந்தவிதமான ஆபத்தையும் ஏற்படுத்தவில்லை—இழிமொழி பேசவில்லை—எரிச்சல் காட்டவில்லை. அமைச்சர், தம்மிடம் ஏராளமாகவும் தாராளமாகவும் கைவசம் உள்ள சரக்கான குத்தல் பேச்சைக் கொட்டிக் கடைவிரித்துக் காட்டினாரே, அதுபோல் அங்கு ஒருவரும் காட்டவுமில்லை, கொட்டவுமில்லை என்ற செய்தியைத் தெரிவிக்கவேண்டி நேரிடுகிறது.

வேகவேகமாக முன்னேறி, நேரு பெருமானுக்குப் பக்கத்திலே இடம்பெற்றுக் கொண்டுள்ள இரும்பு மந்திரியார் பேச்சைக் கேட்டு, எங்கே உனக்கேகூட ஏதேனும் ஐயப்பாடு ஏற்பட்டுவிடுகிறதோ என்ற எண்ணத்திலே, இதனை விளக்கினேன். இல்லையெனில் அன்றாடம் தில்லி சென்று வருகிற ஆயிரத்தோடு நான் ஒருவன்தான்!

அண்ணாத்துரையின் திராவிடநாடு வாதத்துக்குப் பலமான எதிர்ப்பு! சீறிவிழுந்தனர்! சின்னாபின்னமாக்கினர்!! என்றெல்லாம் ஏடுகள் எழுதி இருந்தன.

அந்தப் புயலைத் தொடர்ந்து மாமேதைகள் பலர் கூடினர், பிரிவினைக்கிளர்ச்சி ஒடுக்கப்படவும் தேசிய ஒற்றுமை ஏற்படவும் வழிவகை காண. எனவே தில்லியில், பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும், அலுவலகங்களிலும் அங்காடியிலும்

இராஜ்யசபையில் இம்முறை

Best copy available.

இதுகுறித்தே பேச்சு இருக்கும், கொதிப்பு இருக்கும், கோபமாகப் பார்ப்பார்கள், எதிர்ப்புக் காட்டுவார்கள் என்றெல்லாம் பலரும் எண்ணிக்கொண்டிருந்தனர்—என்னிடம் சொல்லக்கூடச் செய்தனர். ஆனால் அங்கு அவ்விதமான நிலைமையே இல்லை. முன்பு இருந்தது போலவே, பழக, பேச, நட்புக்கொண்டிட முனைந்தபடி தான் உள்ளனர்.

எப்போது உங்கள் இடி முழக்கம்? இன்று உண்டா?—என்று கேட்டபடி இருந்தனர், பல நண்பர்கள், இராஜ்ய சபை உறுப்பினர்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் பாராளுமன்றத்தில் செயலாற்றுவதாலும் தமிழ் நாட்டிலே அதற்குச் செல்வாக்கு மிகுதியும் இருப்பதாலேயும்தான், இம்முறை, தில்லி மந்திரி சபையில் 7 தமிழ் நாட்டவருக்கு இடம் கிடைத்தது; இதை மறுக்க முடியாது என்று அங்கு சர்வசாதாரணமாகப் பேசிக்கொள்கிறார்கள் என்று நமது நண்பர்கள் என்னிடம் கூறினார்கள். எப்படி இதனை நம்புவது என்று நான் யோசித்துக்கொண்டிருந்தேன் — ஒருவிதமான தயக்கம். ஒருநாள், நான் தருமலிங்கத்துடன், மனோகரன் இராஜாராம் முத்து செழியன் ஆகியோர் உடன்வர, பாராளுமன்றத்திலே மாடியிலே அமைந்துள்ள சாப்பாட்டு விடுதி செல்ல, மின்சாரத் தூக்கி அறை சென்றோம். அங்கு என் தயக்கம் போகும்படி, ஒரு காங்கிரஸ் நண்பர், தென்னாட்டவர், பார்லிமெண்டரி காரியதரிசியாக உள்ளவர், தழதழத்த குரலில் எங்களைப் பார்த்து

> நீங்கள்தான் எங்கள் பாதுகாவலர். நாங்கள் அதனை மறக்க மாட்டோம்

என்று சொன்னார்.

முகத்துக்கு இச்சையாக எங்களிடம் பேசவேண்டிய நிலை எவருக்கும் இல்லை அல்லவா? எனவே, ஆளுங்கட்சியில் உள்ளவரும், அதிகாரத்தில் இருப்பவருமான அந்த நண்பர், வேண்டுமென்றே, மேலுக்கு, போலியாக எம்மிடம் அவ்விதம் பேசியிருக்கமாட்டார் அல்லவா! உள்ளத்தில் பட்டதை உரைத்தார் என்பது அவருடைய பேச்சு இருந்த பாணியினாலும், அவர் காட்டிய கனிவினாலும் விளக்கமாகத் தெரிந்தது.

நமது நண்பர்களிடம் ஒரு நாள், இலாக்கா இல்லாத மந்திரி, T. T. கிருஷ்ணமாச்சாரியார் அரைமணி நேரம், அளவளாவிக்கொண்டிருந்ததாகக் கூறினார்கள். தமிழ் நாட்டு நிலை குறித்து மிகுந்த அக்கரை காட்டிப் பேசிக்கொண்டிருந்தாராம்—பாராளுமன்ற மைய மண்டபத்தில்.

சென்ற முறை, குடிஅரசுத் தலைவர் உரைமீது விவாதம்—எனவே பொதுப் பிரச்சினைகள் குறித்துப் பேச நல்ல வாய்ப்புக் கிடைத்தது — திராவிடநாடுபற்றி ஓரளவு பேச முடிந்தது.

இம்முறை, வரி விதிப்பு மசோதாமீதுதான் பேசும் நிலை ஏற்பட்டது. இதிலே, வேண்டுமென்றே திராவிட நாடு பிரச்சினையைச் சொருகிப் பேசவேண்டி நேரிடுமோ என்னவோ என்று ஒரு கவலை இருந்தது. ஆனால் அந்தக் கவலையைப் போக்கும் விதமாக ஒரு உறுப்பினர் — வடாற்காடு மாவட்டத்தவர் — திராவிட நாடு குறித்துக் கண்டனம் தெரிவித்துப் பேசினார்—எனவே அதைச் சுட்டிக்காட்டி, நானும் சில வார்த்தைகள் பேசும் பொருத்தம் ஏற்பட்டது. நான் அவ்விதம் பொருத்தம் பார்த்துப் பேசுவதற்கு முன்பாகவே, கம்யூனிஸ்டு நண்பர் பூபேஷ் குப்தா அவர்கள், என் பேச்சில் குறுக்கிட்டு, திராவிட நாடு பிரிவினையைக் கைவிட்டு விடுங்கள் என்று என்னைக் கேட்டுக்கொண்டார்; எனவே, திட்டவட்டமாக, திராவிட நாடு இலட்சியம் குறித்துப் பேசும் நல்ல வாய்ப்பு மிகப் பொருத்தமாகக் கிடைத்தது.

> நான், இந்தியாவிலிருந்து திராவிடநாடு பிரிந்தாக வேண்டும் என்ற கொள்கையைக் கொண்ட கட்சியினன்

என்பதைக் கூற இடம் தானாக ஏற்பட்டது.

> எரிகுண்டு வீசினாலும் இழிமொழி பேசினாலும் என்னை நான் மேற்கொண்டுள்ள புனிதப் பணியிலிருந்து தடுத்துவிட முடியாது

என்று, தம்பி! உன் ஆற்றலிலே அளவிடற்கரிய நம்பிக்கை வைத்து அந்த அவையிலே கூறிவிட்டு வந்திருக்கிறேன்.

> இந்தப் பிரச்சினையிலே பேரப் பேச்சுக்கு இடம் இல்லை.

> சலுகைகள் தருவதன் மூலம் இந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்டிவிடலாம் என்று எண்ணாதீர்கள்

என்றெல்லாம் கூறிவிட்டு வந்திருக்கிறேன். துண்டு துண்டாகக் கூறுவானேன், தம்பி மாநிலங்கள் அவையிலே நான் பேசியதைத் தமிழாக்கித் தந்திருக்கிறேன்,

விழிப்புற்ற திராவிடத்தின் வீரத் திருமகனே! உன் உள்ளத்திலே கொந்தளித்துக் கொண்டுள்ள எண்ணம் யாவற்றையும் எடுத்துக்கூற நேரம் கிடைக்கவில்லை—இந்த அளவு பேசுவதற்கே, அவையின் துணைத் தலைவர்

கலப்படம் ஒரு குற்றம்.

அவர்கள், இரண்டு மூன்று முறை, நேரம் அதிகமாகி விட்டதைச் சுட்டிக்காட்ட நேரிட்டுவிட்டது.

விழிப்புற்ற, விடுதலை ஆர்வம்கொண்ட ஒரு இனத்தின் எண்ணத்தை, எடுத்துக்கூற நாட்கள் பலவும் போதாதே — பேசத் தரப்படும் சில நிமிடங்களிலே எப்படி எல்லாவற்றையும் எடுத்துரைக்க முடியும். ஆனால், பேசும் வாய்ப்பு மேலும் கிடைக்கும் அல்லவா, பையப்பைய, நமது கருத்துகளை எடுத்துக்கூற இயலும்.

இந்தத் திங்கள் இருபதாம் நாள் பகல் 12-30 மணிக்குமேல் பேசினேன். துணைத் தலைவர், திருமதி வயலட் ஆல்வா தலைமை வகித்தார்கள். நிதி அமைச்சர் மொரார்ஜி தேசாய் அவையிலிருந்தார். அமைச்சர் அழகேசன் இருந்திடக் கண்டேன். அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரும் இருந்திருக்கிறார். நமது தோழர்களும், தமிழ்நாட்டுக் காங்கிரஸ் லோக்சபை உறுப்பினர்கள் பலரும் பார்வையாளர் இடத்தில் வீற்றிருந்தனர்.

பத்திரிகைகள் யாவும் அந்தப் பேச்சிலே, சில இடங்களைக் கோடிட்டுக் காட்டியிருந்தன, என்றாலும், முழுப் பேச்சையும் ஒரு சேரப் படித்தால்தான், பொருள் பலன் உள்ள முறையில் கிடைக்கும் என்பதால், இங்கு முழுப்பேச்சையும் தந்திருக்கிறேன் — தம்பி! படித்து மகிழமட்டுமல்ல — அதுகுறித்துப்பேச, உன்யோசனைகளை உருவாக்கிக்கொள்ள — எனக்கு உன் எண்ணத்தை எடுத்துக்கூற,

இராஜ்யசபையில் பேசியது.

துணைத்தலைவர் அவர்களே,

வரி மசோதா (லோக்சபை) மற்றோர் சபையிலே விவாதிக்கப்பட்டது; இப்போது இந்த அவையில் விவாதிக்கப்பட்டு வருகிறது—இப்புறமும் எதிர்ப்புறமும் உள்ள உறுப்பினர்கள் எடுத்துக்கூறிய நல்ல பல யோசனைகளை நான் கேட்டுக்கொண்டிருந்தேன்.

மக்களுக்கு இந்த முறையிலே வரி விதிக்கப்படுவது ஒருவருக்கும் திருப்தி அளிக்கவில்லை என்பது விவாதத்தைக் கேட்டதிலிருந்து தெரிகிறது.

புதிய வரிகளுக்கான காரணங்கள் என்ன காட்டப்படினும், இந்த அவையிலுள்ளவர்களிலே எந்தப்பகுதியினரும் சரி, வெளியே உள்ள பொதுமக்களில் எந்தப் பிரிவினரும் சரி, புதிய வரிச்சுமையைத் தாங்கத் தயாராக இல்லை. மேலும் மத்திய துரைத்தனத்தாரின் இந்தப் புதிய வரிச்சுமைக்கு முன்பு இரயில்வே அமைச்சு வரிவிதித்திருக்கிறது, இதைத் துரத்திக்கொண்டு இராஜ்ய சர்க்கார்களும் புதியவரிகளைப் போடப்போகிறார்கள். எனவே, வரி மசோதாவைப் பார்க்கும்போது, உடனே ஏற்படுகிற எண்ணம் என்னவென்றால், தற்போதுள்ள சர்க்கார், தங்களின் தோல்விகளால் திகைத்துப்போய், பொதுமக்களை, தேவையற்ற பளுவைச் சுமக்கும்படி கேட்கிறது என்பதுதான். தற்போதுள்ள சர்க்கார், தனது தோல்விகளுக்கும் தனது செய்கையாலும் செய்யத் தவறியவையாலும் ஏற்பட்ட கேடுகளுக்கும் சமாதான விளக்கம் தர இயலவில்லை; ஒன்றுதான் கூறமுடிகிறது, திட்டம் நிறைவேற்றப்பட வேண்டி இருப்பதால் ஒவ்வொரு பளுவையும் மக்கள் சுமக்கவேண்டும் என்பதுதான். இவர்களின் திட்டத்தின் தன்மை என்ன, திட்டம் சமதர்ம அடிப்படையில் இருக்கப்போகிறதா அல்லது வேறுவிதமாகவா என்று ஆய்வாளர்கள் கேட்டால், இவர்கள், 'நாங்கள் மிக நல்லவர்கள், இங்கொருதுண்டும் அங்கொருதுண்டுமாக எடுத்து, அவைகளை ஒன்றாகக் கலந்து, ஒரு கலப்புப் பொருளாதார திட்டம் தயாரிக்கிறோம்' என்கிறார்கள்.

துணைத்தலைவர் அவர்களே! கலப்படம் ஒரு குற்றம் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். நிதிமந்திரி, கலப்படக் குற்றத்தைக் கோபத்துடன் கண்டித்துப் பேசினார் லோக்சபையிலே. கலப்படம் செய்யும் குற்றவாளிகளைக் கண்டுபிடித்தால், அவர்களைச் சவுக்காலடிப்பது மட்டுமல்லாமல்.........

மொரார்ஜிதேசாய்:- நான் அதைச்சொல்லவில்லை. அவர்களைச் சவுக்காலடிக்க வேண்டுமென்று ஒரு யோசனை கூறப்பட்டது.

சி. என். அ:-

ஆகவே, நிதிமந்திரி அவர்களைத் தண்டிக்கவும் இஷ்டப்படவில்லை! என்றாலும், கலப்படம் ஒரு குற்றம்; பொருளாதார தத்துவக்கலப்படம் எத்தகைய குற்றம் என்றால், அதற்கான வினையை, இக்கால மக்கள் மட்டுமல்லாமல் வருங்கால மக்களும் அனுபவித்தாகவேண்டும், அத்தகைய குற்றம். எனவே, இன்றைய சர்க்கார், பொருளாதார தத்துவ அடிப்படையிலே, தமது கொள்கையை வகுத்துக்கொள்ள வேண்டுமென விரும்புகிறேன். ஆனால் அவர்கள் எந்தப் பொருளாதார தத்துவத்துக்கும் புதிய வியாக்யானம்வேண்டும் என்கிறார்கள். அவர்களுக்குச் சாதகமாக இருக்கும்போது பழைய வியாக்யானத்தை

வேங்கை கண்டு விரண்டோடியவர்!

எடுத்துக்கொள்கிறார்கள், சாதகமாக இல்லாதபோது, நாங்கள் தத்துவத்திலே மூழ்கிவிடுபவர்கள் அல்ல; நாங்கள் செயல்முறையில் நாட்டம் உள்ளவர்கள் என்று கூறிவிடுகிறார்கள். தொல்லை அவ்வளவும், எதனால் ஏற்படுகிறது என்றால், இந்தச் சர்க்காருக்கு ஒரு தத்துவம் இல்லை, பொருளாதார இலட்சியம் இல்லை; நாட்டிலே பணியாற்றுகிற ஒவ்வொரு அரசியல் கட்சியிலிருந்தும் புகழ் தரும் இலட்சியங்களைக் களவாடிக்கொள்ளவிரும்புகிறார்கள். பொதுஉடைமைக் கட்சியிடமிருந்து, சுதந்திரக் கட்சியிடமிருந்து, மற்ற எல்லா அரசியல் கட்சிகளிடமிருந்தும் கருத்துகளைக் களவாடிக்கொள்ள விரும்புகிறார்கள். இங்கு வேறு எந்த அரசியல் கட்சியும் இருக்கத் தேவையில்லை, ஏனெனில், நாங்கள் சமதர்மவாதிகளாகவும் இருக்கிறோம், முதலாளித்துவவாதிகளாகவும் இருக்கிறோம், எம்மிடம் கூட்டுப் பொருளாதாரத்துவம் இருக்கிறது என்கிறார்கள். எனவே இன்றைய சர்க்காருடைய கொள்கையின் அடிப்படையில் காணப்படும் பொருளாதார தத்துவம்பற்றிய திட்டவட்டமான விளக்கம் தரப்படுமானால், மற்றக்கட்சிகள் தமக்குரிய தத்துவங்களை எடுத்துவைக்கமுடியும். கனம். பூபேஷ்குப்தா, எடுத்துக்காட்டினார், காங்கிரசில் இரண்டு கோஷ்டிகள் உள்ளன, ஒரு கோஷ்டி வலதுசாரிபக்கம் வலிக்கிறது, மற்றொரு கோஷ்டி இடப்பக்கம் இழுக்கிறது என்று; கம்யூனிஸ்டு கட்சி வலதுசாரிக்கோஷ்டியை வெளியேற்ற, (காங்கிரசில் உள்ள) இடதுசாரிக் கோஷ்டிக்கு உதவிசெய்யும் என்று திட்டவட்டமாகக் கூறினார். துரதிர்ஷ்டவசமாக, புபேஷ்குப்தா அவர்கள், இன்றைய நிதி அமைச்சரை, வலதுசாரிக் கோஷ்டியில் சேர்த்துப் பேசினார்; வெளியேற்றப்படவேண்டிய கோஷ்டியில்.

வரிவிதிப்புக் கொள்கையின்கீழ் எத்தகைய தத்துவம் காணப்படினும், நேர்முக வரி, மறைமுக வரி இவைகளிலே செய்யப்பட்டுள்ள மாறுதலால் மொத்தத்தில் 71·7 கோடி ரூபாய் ஒரு முழு வருடத்தில் வருவாய் கிடைக்கிறது, இதிலே 45·5 கோடி ரூபாய் மறைமுக வரியாகவும் 27·2 கோடி நேர்முக வரியாகவும் பெறப்பட இருக்கிறது. இந்த ஏற்பாடுகளால், வருவாய் வர இருக்கிறது என்று துன்பம் கண்டும் துணுக்குறாத முறையிலே ஒருவிதமாக மகிழ்ச்சியுடன் நிதி அமைச்சர் கூறுகிறார். தாங்கமுடியாத வரியைச் செலுத்தும்படி கேட்கும்போது, வற்புறுத்தப்படும்போது மக்கள் அடைகிற உணர்ச்சிகளை அவர் உணரவில்லை, வேதாந்திபோலப் பேசுகிறார், பணம் படைத்தோர், மேலும் மேலும் அதிக அளவு வரி செலுத்தவேண்டும், ஏழைகள், இவைமூலம் முன்னேற்றத்தை அதிகமாகப் பெறவேண்டும், இது எமது சமதர்ம அரசுக் கொள்கையின் ஒரு பகுதியாகும் என்கிறார். இந்த இரண்டு அம்சங்களையும் நிதி அமைச்சர் மெய்ப்பித்துக் காட்டவேண்டுமென்று பெரிதும் விரும்புகிறேன். பணக்காரர் வரிப்பளுவின் அதிகமான பாகத்தை ஏற்றுக்கொள்ளும் முறையிலும், அதன் பலன்களை ஏழைகள் அதிக அளவில் பெறும் தன்மையிலுமா, நிதி அமைச்சர் தமது வரிக்கொள்கையை வகுத்துக்கொண்டிருக்கிறார்? மந்திரி சபையின் மற்றோர் உறுப்பினர் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர் கூறியுள்ள ஒரு கருத்தை —அதனைக் கண்டனம் என்றே கூறலாம் — எடுத்துரைக்க விரும்புகிறேன். இந்திய சர்க்கார் கையாண்டு வருகிற வருவாய் வரிவிதிப்புக் கொள்கை காரணமாக, ரூபாயின் மதிப்புக் குறைந்துகொண்டு வருகிறது, நூற்றுக்குத் தொண்ணூற்று ஐந்து மக்கள் இழுத்துப் பறித்துக்கொண்டு வாழும் நிலையிலும் அதற்கும் மட்டமாகவும் இருக்கிறார்கள், அதிகமான செல்வம் குறிப்பிட்ட சிலரிடம் போய் முடங்கிக்கொள்கிறது, என்று அவர் கூறியிருக்கிறார். இப்புறத்தில் உள்ள உறுப்பினர்கள் ரூபாயின் மதிப்புக் கீழே விழுந்துகொண்டிருக்கிறது என்று சொன்னால், முழுத் தகவலும் தெரியாது இவர்களுக்கு என்று சொட்டு சொல்லிவிடுவார்கள், ஆனால் நான், இலாக்கா இல்லாத மந்திரி, தில்லியை விட்டு வெளியேறுகிறேன் ஏனெனில் இங்கு வேங்கைகள் உலாவுகின்றன என்று கூறிவிட்டுச் சென்ற, கனம். டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் கருத்தை எடுத்துக் கூறினேன். வேங்கையை துரத்தி அடித்துவிட்டார்கள் என்று நம்புகிறேன், அல்லது கெட்டிக்கப்பட்ட துப்பாக்கியுடன் அவர் மீண்டும் இங்கு வந்திருக்கக்கூடும். எது எப்படி இருப்பினும், ரூபாயின் மதிப்புக் குறைந்துகொண்டு வருகிறது என்று பொறுப்புமிக்க பதவியில் உள்ள பொறுப்புமிக்க டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் கூறியுள்ளார். பொறுப்பு மிக்கவர் என்று எதனால் கூறுகிறேன் என்றால், அவரிடம் எந்த இலாகாவும் ஒப்படைக்கப்படவில்லை, எனவே எல்லா இலாகாவும் அவருடையதே என்பதனால். ரூபாயின் மதிப்பு வீழ்ந்திருப்பதற்கு, யார் குற்றம் சாட்டப்பட வேண்டியவர்கள்...? எதிர்க் கட்சி வரிசையில் உள்ளவர்களா? ஆளுங் கட்சி உறுப்பினர்கள், திட்டங்களை உருவாக்கும்போது, மரியாதைக்குக் கூட எங்களைக் கலந்தாலோசிப்பதில்லை. செல்வவான்களின் பணத்தையும் ஏழைகளின் ஓட்டுகளையும் அதிகாரக் குரலிற் கேட்டுப்பெறும் அரசியல் கட்சியினால் நடத்தப்பட்டுவரும் தேசிய சர்க்கார் 15 ஆண்டுகள் இருந்தும், ரூபாயின் மதிப்பு வீழ்ந்து வருகிறது, 100க்கு 95 மக்கள் இழுத்துப் பறித்துக்கொண்டு கிடக்கிறார்கள்,

குருட்டுப் போக்கு! முட்டுச் சந்துகள்!

என்பதனை டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் எடுத்துக் காட்டும் நிலைமை இருக்கிறது. இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் முற்றுப்பெற்று மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நடுவிலே இருக்கும் இந்த நிலையில், மந்திரி சபை உறுப்பினராக உள்ளவரின் கண்டனம் இப்படி இருக்கிறது. 100-க்கு 95 பேர் இழுத்துப் பறித்துக்கொண்டுள்ள இந்த நேரம்தானா, மக்களுக்கு வரிபோடுவதற்கு ஏற்ற நேரம்? அதிலும் மறைமுக வரிகள்! மற்றும் ஒரு புள்ளி விவரம்—சர்க்கார் அமைத்த தேசிய ஆய்வுக்குழு கூறியிருப்பது. 270 இலட்சம் மக்களுக்கு ஒரு நாளைக்கெல்லாம் ஒருமணி நேரம்தான் வேலை கிடைக்கிறது, 200 இலட்சம் மக்களுக்கு இரண்டு மணி நேரம், 450 இலட்சம் மக்களுக்கு 4 மணி நேரம், வேலை கிடைக்கிறது. மற்ற நேரத்தில் வேலை இல்லை. கோடி கோடியாகப் பணத்தைச் செலவழிக்கிறோம்—மக்களிடமிருந்து பெற்ற பணம்—கடனாகவும் உதவித் தொகையாகவும் வெளியே இருந்துபெற்ற பணம்—பதினைந்து வருடச் சுயராஜ்யத்துக்குப் பிறகு, பன்னிரண்டு வருடத் திட்டவேலைக்குப் பிறகு, 270 இலட்சம் மக்களுக்கு ஒரு நாளைக்கு ஒரே ஒரு மணி நேரம் தான் வேலை கிடைக்கிறது. திட்டங்களுக்காக மக்களைக் கசக்கிப் பிழிந்த பிறகு, திட்டங்களுக்காக இவ்வளவு தொகை செலவிட்டான பிறகு இந்த நிலை இருக்கக் காரணம் என்ன? என்ன விளக்கம் இதற்கு?

மற்றோர் நிலைமை என்னவென்றால், நமது வெளி நாட்டு இருப்புக் கரைந்துவிட்டது, ஏற்றுமதி விழுந்துவிட்டது, வெளிநாடுகள் தரக்கூடிய உதவித்தொகையில் வெட்டு விழும்போல் தெரிகிறது, மறைமுக வரிகள் வளர்ந்தபடி உள்ளன, விலைகள் ஏறியபடி உள்ளன, நேர்முக வரியைச் செலுத்தாமல் நழுவி விடுகிறார்கள், கருப்புப் பணம் பெருகிக் கொண்டு வருகிறது. 118 கோடி ரூபாய் வருமான வரி நிலுவை இருப்பதாகக் கூறப்படுகிறது. ஏன் இவ்வளவு பெரிய தொகை வசூலிக்கப்படாமல் இருக்கிறது என்று நிதி அமைச்சரைக் கேட்கிறேன். திட்டங்களுக்காக வரி செலுத்தியாகவேண்டும் என்று, மக்களிடம் எந்தத் துணிச்சலில் வருகிறார்? 118 கோடி ரூபாய் வருமான வரி நிலுவை இருக்கிறதே, அவர்களிடம் காட்டுவதுதானே கண்டிப்பு! இந்த 118 கோடி ரூபாயில் ஒரு பாதியையாவது, இவர் அக்கரை எடுத்துக்கொண்டு, கண்டிப்பான முறைகளைக் கையாண்டு வசூலித்திருப்பாரானால், மக்களுக்கு வரி போடவேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காதே! ஆனால் அவர் துண்டு விழுவதைச் சரிக்கட்ட வரிபோடுபவரல்ல, பாதுஷா போலக் கூறுகிறாரே, 71 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கப்போகிறது என்று. அவருக்கு வரி வசூலிக்கும் கலெக்டர் மனப்பான்மை இருக்கிறதேயன்றி, இந்தப் பெரிய துணைக்கண்டத்து வளர்ச்சியைக் காண விரும்பும் அதிகாரியின் மனப்பான்மை இல்லை. அதனால் தான், எனது நண்பர் பூபேஷ்குப்தா, இவர்களின் பொருளாதார திட்டங்களின் அடிப்படையில் உள்ள அரசியல் தத்துவம் என்ன என்று அறிந்துகொள்ள விரும்பினார். எனவே நான் சாட்ட விரும்பும் முதல் குற்றச்சாட்டு, இதுவே; உங்களிடம் எந்தத் திட்டவட்டமான அரசியல் தத்துவமும் இல்லாததால், நீங்கள் குருட்டாம் போக்கிலே, நாட்டை முட்டுச் சந்துகளிலே இழுத்துக் கொண்டு செல்கிறீர்கள்! ஆகவே இந்த வரிவிதிப்புகளால் ஏற்படக்கூடிய விளைவுகள் என்ன என்றுகூடத் தெரிய முடியவில்லை. வரியும், வரி அதிகரிப்பதும், சுபீட்சத்தின் அறிகுறி என்று அவர்கள் பேசிக்கொண்டு போகிறார்கள். சுபீட்சத்தின் அறிகுறி என்பதை ஒப்புக்கொள்கிறேன், ஆனால் யாருடைய சுபீட்சம் என்பதற்குப் பதில் அளித்தீர்களா? மக்களின் எந்தச் சாராரின் சுபீட்சம்? அதற்குப் பதில் அளிக்கப்படவில்லை. எனவே மறைமுக வரிகள், குறிப்பாக அடிப்படையில் மிகத் தேவைப்படும் பண்டங்களின் மீது விதிக்கப்பட்டுள்ள வரிகளை, வரி மசோதா. லோக் சபையில் நிறைவேற்றப் பட்டிருந்த போதிலும், நீக்கிவிடவேண்டும். நிதி அமைச்சர் வேதாந்த மனப்பான்மைகொண்டவர் என்று புகழப் படுகிறார்—ஆளுங்கட்சி உறுப்பினர்களின் கண்டனங்களை அவர் கணக்கிலெடுத்துக்கொண்டிருப்பாரானால், ஒருவரும் இந்தப் புதிய வரிகளை ஆதரிக்கவில்லை என்பதை அறிந்துகொள்ளமுடியும். கட்சி கொடுத்த கொறடாவினால் ஓட்டுகள் சாதகமாகக் கிடைத்தன—கட்டுப்பாட்டுக்குப் பணிந்து ஆதரவு அளித்தனர். எனவே அவர் இந்த வரிகளை விதிக்க தர்மம் இடம்தரவில்லை. எனவே அவர், அவருடைய ஆளுங்கட்சி உறுப்பினர்களே சொல்லியுள்ள கண்டனத்திற்கு மதிப்பளிப்பாரானால் அவர் இந்நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, எந்த வேதாந்தத்தை அவர் மணந்துகொண்டிருப்பதாகக் கூறப்படுகிறதோ, அதற்கேகூட பெரிய மதிப்பு அளித்தவராகத்திகழ்வார். துணைத்தலைவர் அவர்களே, இந்தச் சந்தர்ப்பத்தில், இந்நாட்டிலே விசித்திரமான, எங்கும் காணாத விந்தையான முறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஜனநாயகம் பற்றிச் சிறிதளவு கூற விரும்புகிறேன். இப்புறத்தில் உள்ள உறுப்பினர்கள் போலவே கோபதாபமாகத்தான், இரு சபைகளிலும் உள்ள ஆளுங்கட்சி உறுப்பினர்கள் புதிய வரி ஏற்பாடுகளைக் கண்டித்துப் பேசினர். ஆனால் வெளியே சென்றாலோ, இன்றைய சர்க்காரை அவர்கள்

ஏமாற்றுவோரைக் கண்டுபிடியுங்கள்!

ஆதரித்துத் தீரவேண்டி இருக்கிறது; கொறடா கொடுக்கப்படுகிறது, அதனல் சர்க்காருக்குச் சாதக மாக 'ஓட்' அளிக்கிருர்கள். இந்த மாதம், விரைவில், கம்யூனிஸ்டு கட்சி, ஜனசங்கம், சுதந்திரக்கட்சி, நான் எந்தக் கட்சியில் இருப்பதைப் பெருமையானதாகக் கருதுகிறேனே, அந்தக்கட்சியும், நாங்கள் எல்லோரும் தனித் தனியாக, வரிப்பளுவைக் கண்டித்து, கண்டனக் கூட்டங்கள் நடத்த இருக்கிரேம். மக்களிடம் சென்று, இந்த வரிவிதிப்பு நடைமுறைக்குஏற்றதல்ல, ஏற்கனவே வறுமையால் வதைபடும் மக்களை இந்த வரிகள் மேலும் வாட்டி எடுக்கும் என்று நாங்கள் பேசும்போது, இதே காங்கிரஸ் உறுப்பினர்கள், ஆளுங்கட்சி உறுப்பினர் கள்தான் முன்வந்து, சர்க்காரைப் பாதுகாக்க ஆதரவுப் பிரசாரம் செய்யபபோகிருர்கள். ஆனல், மக்கள் உங்கள் வார்த்தைகளை ஏற்றுக்கொள்வார்கள் என்று எண்ணுதீர்கள். சர்க்காரை ஆதரிக்க, இந்தச் சபைக்கு வெளியே என்ன பேசப்படுகிறது என்பதை மட்டுமல்ல, சபையிலே என்ன சொல்லப்படுகிறது என்பதையும் அவர்கள் படிக்கிருர்கள். எனவேதான், ஆளுங்கட்சி உறுப்பினர்கள், நிதி அமைச்சர் விதித் துள்ள மறைமுக வரிகளைச் சரியான முறையிலும், துணிவுடனும் கண்டித்ததுபற்றி நான் மகிழ்ச்சி அடை கிறேன். நிதி அமைச்சர், திரும்பிப் பார்த்து, ஆனல் எனக்குப் பணம் வேண்டுமே! என்று கேட்கக்கூடும். பணம் பெற நான் கூறக்கூடிய வழிகளிலே ஒன்று, வரு மான வரி நிலுவையை வசூலிப்பது. ஏமாற்றுபவர்களைக் கண்டுபிடியுங்கள், நிர்வாகத்தில் உள்ள ஓட்டைகளை அடை யுங்கள்! என் நண்பர் பூபேஷ்குப்தா சொன்னவற்றை எல்லாம் நான் மறுபடியும் கூறத்தேவையில்லை—உங்க ளால் ஜீரணிக்கமுடியாமற் போகக்கூடும் — ஆனல், இப்போதுஉள்ள அமைப்பு முறையின்படியேகூடப் பல் வேறு இலாக்காக்களிலே சிக்கனம் ஏற்படுத்தினல், நிர்வாக அமைப்புகளிலே உள்ள சந்து பொந்துகளை அடைத்துச் சீர்படுத்தினல், நிர்வாகத்தை நடத்திச் செல்லத் தேவைப்படும் பணமும் கிடைக்கும், திட் டத்தை நடத்திச்செல்லக்கூடப் பணம் கிடைக்கும். ஆனல், எப்போது இந்தப் பகுதியில் உள்ள நாங்கள், நிர்வாக அமைப்பு முறைகேடாக இருக்கிறது, இலஞ்ச ஊழல், பதவி தருவதில் சலுகை போன்றவைகள் உள் ளன என்று எடுத்துச்சொன்னலும் மந்திரிசபை உறுப் பினர்கள் 'நிரூபித்துக்காட்டு' என்று அறைகிருர்கள்.

ஹைதராபாத் சிக்கனக் குழு, இலஞ்சப் புகாரை மெய்ப்பித்துக் காட்டுவது கடினம் என்று அடிக்கடி கூறப்படுகிறது. அதனலேயே, புகார் எழுகிற போதெல்லாம், விசாரணை நடத்தத் துளிகூடத் தயக் கம் காட்டக்கூடாது என்று ஏற்படுகிறது — என்று குறிப்பிட்டிருக்கிறது. என்ருலும், இன்றைய சர்க்கார் மேற்கொண்டுள்ள போக்கு எப்படி இருக்கிறது? முந்திரா ஊழல் நடவடிக்கையின்போது, குற்றம் செய்தவர் என்று காட்டப்பட்ட, இந்திய சர்க்கார் அதிகாரி ஒருவர்—H. M, படேல் என்பவர், நர்மதா பள்ளத்தாக்கு கார்ப்ப ரேஷனில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிருர். பத்திரிகை யில் பார்த்தேன். தற்காலிகப் பதவிதான். அந்தச் சபை யில் இதுகுறித்துக் கேள்வி கேட்கப்பட்டபோது, பிரதம மந்திரி எழுந்திருந்து.........

பூபேஷ் குப்தா:- இரண்டு வருஷங்களுக்குப் பிறகு, அவ ருக்கு பத்ம விபூஷன் பட்டம் கொடுப்பார்கள்......!

சி. என். ஏ:-

ஏன், மந்திரி சபையிலேயே இடம் கிடைக் கக்கூடும். லோக் சபையில் கேள்வி கேட்கப்பட்ட போது பிரதம மந்திரி எழுந்திருந்து தனக்கு அது குறித் துத் தெரியாது என்று பதில் அளித்தார். அவர் அவ் விதம் சொன்னது கண்டு நான் மகிழ்ச்சி அடை கிறேன். ஏனெனில், அவர் ஆமாம், யார் நியமிக்கப் பட்டார்கள் என்பது எனக்குத் தெரியும்—என் ஒப்பு தலும் அதற்கு உண்டு என்று கூறி இருந்திருப்பாரா ஞல் நான் திடுக்கிட்டுப் போயிருப்பேன். நல்ல வேளை யாக, எனக்கு அது தெரியாது என்று அவர் பதில் அளித்தார். இராஜ்ய சர்க்காருக்கும் மத்திய சர்க்கா ருக்கும் உள்ள தொடர்பு இப்படித்தான் இருக்கிறது. நாடெங்கிலுமிருந்து அறிவாளர்களைத் திரட்டிக் கொண்டு வந்து தேசிய ஒருமைப் பாட்டுக்கு வழி காட்டுங்கள் என்று கேட்கிறீர்கள். முதலில் உங்கள் சர்க்கார்களிலே ஒருமைப்பாடு ஏற்படுத்துங்கள்! ஏன் அவர் வேலைக்கு அமர்த்தப்பட்டார், எப்படி அமர்த்தப் பட்டார் என்பது எனக்குத் தெரியாது என்று கூறுகிற ஒரு பிரதம மந்திரி இருக்கிருர். இதுபற்றிப் படிக்கும் போது, மக்களுடைய தீர்ப்பு என்னவாக இருக்கும்? முந்திரா ஊழல் பிரச்சினையில், இந்த அதிகாரி பிணைக் கப்பட்டிருந்தார் என்பது மக்களுக்குத் தெரியும். அப் படிப்பட்டவர் பசையுள்ள ஒரு வேலையில் அமர்த்தப்பட் டிருக்கிருர் என்று பத்திரிகைகளில் படித்தால், மக்கள் என்ன சொல்லுவார்கள்? உங்களுடைய சமதர்மப் பேச்சு, சமதர்ம தத்துவம் கிடக்கட்டும், (இந்த நியமனம் பற்றி) மக்கள் என்ன பேசுவார்கள்? அதனல்தான், நிர்வாகத்தில் உள்ள ஓட்டைகள் அடைக்கப்படவேண்

சர்க்காரின் கையாலாகாத் தன்மை!

டும் என்கிறேன்; ஓட்டைகளை அடைக்கவேண்டு மென்ருல் உண்மையான, நிரந்தரமான மாறுதல் நிர்வாக அமைப்பில் ஏற்பட்டாகவேண்டும்.

நிர்வாகத்தில் என்ன சீரமைப்புச் செய்யவேண் டும் என்பதுபற்றி ஆய்வுரை கூற அழைக்கப்பட்ட, கோர்வாலா தமது அறிக்கையில், வருமான வரிமுறை பற்றிக் குறிப்பிடுகையில், இதுபோலக் கூறியுள்ளார்.

"வருமான வரித்துறையைப் பொறுத்த வரையில், பொதுமக்கள் முறையிடுவது என்னவென்ருல், சாமான்யர்களை, காரண மின்றித் தொல்லைப்படுத்துகிருர்கள், ஆனல் பல இலட்சக்கணக்கில் வரிகொடுக்காமல் ஏமாற்றித் திரிபவர்கள் தப்பித்துக்கொண்டு விடுகிருர்கள் என்பதுதான். வருமான வரி விசாரணைக் குழுவினல் சரியான எந்தப் பல னையும் பெற்றளிக்கமுடியவில்லை. துளிகூடக் கவலையின்றி, மிகத்துணிகரமான, வரி ஏமாற் றும் பேர்வழிகள், தங்கள் நடவடிக்கைகளை நடத்திக்கொண்டு போகிருர்கள். இதைக் காணும்போது, மிகுதியும் செல்வாக்குள்ள செல்வவான்களுடன் மோதிக்கொள்ள நேரி டும்போது, இந்தச் சர்க்காரின் கையாலாகாத் தனம்தான் தெரிகிறது என்ற நம்பிக்கை மிகப்பரவலாக இருக்கிறது.

கையாலாகாத்தனம் என்பது வார்த்தை. நான் அவ் வளவு கடுமையான வார்த்தையைக்கூற ஒருமுறைக்கு இருமுறை யோசித்து இருப்பேன். ஆனல், பொது நிர் வாக சீரமைப்புக்கானவழி கூறும்படி சர்க்காராலேயே அழைக்கப்பட்ட காரணத்தால் கோர்வாலா அவர்கள் சர்க்காரின் கையாலாகாத தன்மை என்று கூறுகிருர். உங்கள் சர்க்கார் கையாலாகாதது என்று கோர்வாலா கூறி யிருக்கும்போது, கோடிகோடியாகப் பணம் தரும்படி நீங்கள் எந்த யோக்கியதையின்பேரில் கேட்கிறீர்கள் என்று மந்திரி சபையினரைக் கேட்கலாமல்லவா? எனவே, நிர்வாக அமைப்பிலே இன்னும் சற்று உயிர்ப்புச்சக்தி, செய லாற்றும்திறன் ஏற்படவேண்டும் என்று விரும்புகிறேன்.

இதோ மற்ருேர் கண்டனம்; இது வர்த்தகத்துறை அமைச்சுப்பற்றியது.

பெரிய வணிக முதலாளிகளின் விருப்பத் துக்கு இசைவு தருவதிலே வணிகத்துறை அமைச்சு மிகவும் கெட்டபெயர் எடுத்துக் கொள்ளும் அளவுக்கு நடந்துகொண்டிருந் திருக்கிறது;

வேங்கைகள் உலவுகின்றன என்று டி. டி. கிருஷ்ண மாச்சாரி சொன்னது ஒருவேளை இதை எண்ணித் தான்போலும். வேங்கைகள் வெளியே உலவுகின்றன என்ற முடிவுக்கு அவர் எப்படி வந்தார் என்பதை என் ஞல் புரிந்துகொள்ள முடியவில்லை; துணிந்து யூகமாகச் சொல்வதானல், வர்த்தகத்துறை அமைச்சராக அவரே முன்பு இருந்ததால், அவருக்கு அப்படிப்பட்ட விசித்திர மான அனுபவம் ஏற்பட்டிருக்கக்கூடும். எது எப்படி இருப்பினும், வணிகக் கோமான்களுக்கு லைசென்சுகள் வழங்குவதிலே, வணிகத்துறை அமைச்சு கெட்டபெயர் எடுத்திருக்கிறது.

இவைகளெல்லாம் திருத்தப்பட்டால், எனக்கு முன்பு பேசியவர் குறிப்பிட்ட மக்களின் ஆர்வமான, ஆதரவு, திட்டத்துக்குக் கிடைக்கக்கூடும். ஆனல், வரி கள் ஏறிக்கொண்டே போவதையும், விலைகள் ஏறிக் கொண்டிருப்பதையும், வேலையில்லாத்திண்டாட்டத்தின் அளவு பெரிது பெரிதாக வளர்ந்துகொண்டுபோவதை யும், வாழ்க்கைத் தேவைகளைக்கூட, இன்றுள்ள அர சாங்க அமைப்பினல் தர இயலாதநிலை இருப்பதையும் காணும்போது, திட்டங்களில் ஆர்வம்காட்ட மக்கள் முன்வருவார்கள் என்று எப்படி எதிர்பார்க்கமுடியும்? சர்க்காருடைய வரிவிதிப்புக் கொள்கையிலே இந்த அம் சம் சரி, அந்த அம்சம் சரி என்று ஆதரித்துச் சிலர் கூறுகிருர்கள்.

இந்தியாவிலிருந்து திராவிடநாடு பிரியவேண்டும் என்று வற்புறுத்தும் கட்சியைச் சேர்ந்தவன் நான் என்ரு லும், நீங்கள், தொழில் வளர்ச்சிக்காகத் திட்டமிட்ட முறை இருக்கிறதே, அது இந்தத் துணைக்கண்டத்திலே பெறக்கூடிய முழு அளவு செல்வவளர்ச்சியைப் பெறத் தக்கவிதமாக இல்லை என்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். பொருளாதார செயல் முறைகள் ஒரு சீராக அமையவில்லை, தொழில் வளர்ச்சித் திட்டங்கள் ஒரு சீராக அமையவில்லை. மிகுந்தகால தாமதத்துக்குப் பிறகுதான்.........

பூபேஷ்குப்தா:- திராவிட நாட்டை விட்டுவிடுங்கள், இந்தியக் குடி அரசில் ஒரு பகுதியாக இருந்து, தமிழ்நாடு, அதிக தொழில் திட்டங்கள் பெற நாம் ஒன்றுபட்டுப் போராடுவோம். அந்த ஒப்பந்தம் ஏற்

'தனித்தன்மை அளியுங்கள். இல்லையேல் கேரளம் ஒரு முள்!'

படுத்திக் கொள்வோம்—அந்த ஒப்பந்தத்தை பெற்றுக் கொள்கிறீரா?

சி. என். ஏ:-

என்னுடன் இருக்கவேண்டுமென, ஆவலாக இருப்பதற்காக நான் பூபேஷ்குப்தாவுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். ஆனால், எனது இலட்சியத்தை விட்டுக்கொடுத்துவிட்டு அவரைக் கூட்டாளியாக்கிக்கொள்ள நான் விரும்பவில்லை.

நீண்டகால தாமதத்துக்குப் பிறகுதான், சர்க்கார், தமது தொழில் வளர்ச்சித் திட்டம் ஒரு சீரானதாக இல்லை என்பதை உணர்ந்துகொண்டார்கள். இப்போது அவர்கள் ஒரு பொருளாதாரப் பிரச்சினை பேசுகிறார்கள் — அதன் அடியில் பல அரசியல் தத்துவங்கள் உள்ளன—அதுபற்றிப் பேசுபவர்கள், அந்தத் தத்துவங்களின் பொருளை, முழுவதும் வெளியே காட்டிப் பேசுவதில்லை. பிரதேச பொருளாதார சீரமைப்பு என்பது பற்றிப் பேசுகிறார்கள். சில பிரதேசங்கள் பொருளாதாரத்தில் மிகுதியான வளர்ச்சி அடைந்துள்ளன, சில பகுதிகள் முன்னேற்றம் அடையவில்லை, எனவே தொழில் வளர்ச்சியைப் பொறுத்தமட்டில், நாட்டிலே புறக்கணிக்கப்பட்டுப்போன பகுதிகளில் விசேஷ கவனம் செலுத்துவது இனி இந்திய சர்க்காரின் கொள்கையாக இருக்கும் என்கிறார்கள். ஆகவே, திட்டமிட்டுக் கொண்டிருந்த இந்த 12 ஆண்டுகளும் நீங்கள் தவறான முறையிலே திட்டமிட்டுக்கொண்டு இருந்தீர்கள், ஒரு சீரான பொருளாதார வளர்ச்சித் திட்டம் போடாமலிருந்திருக்கிறீர்கள்.

முன்பொருநாள், திருமதி. தேவகி கோபிதாஸ், வளர்ச்சித் திட்டங்களிலே கேரளம் எப்படிப் புறக்கணிக்கப்பட்டு வரப்படுகிறது என்பதனைத் தெளிவாக எடுத்துக் கூறிக்கொண்டு வந்தபோது, திட்டம் தீட்டப்படும் போது, கேரளத்தின் தனித் தன்மைகள், தனியான இயல்புகள் ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு, பரிகாரம் தேடவேண்டும், இல்லையேல், இந்திய யூனியன் வளர்ச்சிக்கு அது ஒரு முள்போல் இருக்கும், இந்திய யூனியன் வளர்ச்சி பாதிக்கப்படும் என்று கூறினார். இந்தக் கருத்துரை, இந்தியா ஒன்று, பிரிக்கப்படக் கூடாதது என்ற நம்பிக்கை கொண்டவரிடமிருந்து வெளிவருகிறது. கேரளத்தின் தனித் தன்மைகள், தனி இயல்புகள் ஆகியவற்றைக் கவனிக்காவிட்டால், கேரளம் முள் போல இருக்கும் என்கிறார்.

P. A. சாலமன்:- காங்கிரசுக்குள்ளேகூட, திராவிட கழக ஆட்கள் இருக்கிறார்கள்.

சி. என். ஏ:- காங்கிரசிலே, திராவிட கழக மனப்பான்மை கொண்டவர்கள் இருக்கக்கூடும். ஆனால் நான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவன்...

P. A. சாலமன்:- நான் திராவிட முன்னேற்றக் கழகத்தைத்தான் குறிப்பிடுகிறேன்......

துணைத் தலைவர்:- மேலும் எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்ள விரும்புகிறீர்கள்?

சி. என். ஏ:- மேலும் ஒரு ஐந்து நிமிடங்கள் எடுத்துக் கொள்ள அனுமதியுங்கள். திருமதி அவர்களே! இந்திய யூனியனுக்கு ஒரு முள்ளாக இருக்கும் என்று அம்மையார் குறிப்பிட்டதைச் சொல்லிக் கொண்டிருந்தேன். துணைத் தலைவர் அவர்களே! இதில் கவனம் செலுத்தும்படி, தங்கள் மூலமாக பூபேஷ் குப்தா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அம்மையார் இந்திய யூனியனுடைய வளர்ச்சிக்கு ஒரு முள்போலிருக்கும் என்று கூறுகிறார்கள். முட்களை என்ன செய்கிறோம்? வெளியே எடுத்து விடுகிறோம்! அதுதான் நாம் செய்வது. அரசியல் அமைப்பிலாயினும் சரி, உடலில் ஆகிலும் சரி, முள் இருப்பின், அந்த முள்ளை வெளியே எடுத்து விடுகிறோம்.

பூபேஷ் குப்தா:- என்ன சொன்னீர்கள்? நான் கவனிக்கவில்லை......

சி. என். ஏ:- உம்முடன் இதுபற்றி விவாதித்துக்கொண்டிருக்க எனக்கு நேரம் இல்லை. பிறகு விவாதிக்கலாம். எனவே, திருமதி அவர்களே! இந்திய ஒருமைப்பாட்டிலே நம்பிக்கை கொண்டவர்களாக இருப்பினும், தாம் வாழும் பகுதியில் தொழில் துறையிலே கட்டுப்பாடான வளர்ச்சி ஏற்படவில்லை என்றால், இந்திய ஒருமைப்பாடு எனும் பிரச்சினை தீர்க்கப்பட்டதாகக் கருதுவதற்கில்லை என்று எண்ணுகிறார்கள்.

பூபேஷ்குப்தா:- தமிழ் நாட்டிலே உள்ள ஜனநாயக இயக்கத்தை உங்கள் பிரிவினை இயக்கம் வலிவற்றதாக்கிவிடும் என்று நான் நினைக்கிறேன். தமிழ் நாட்டுக் கோரிக்கையையும் அது கெடுத்து விடும். நீங்கள் விரும்புவதும் கிடைக்காது—

பேரப் பேச்சுக்கு இடமே இல்லை!

அதனை நாங்கள் விரும்பவில்லை—அந்தப் பகுதிக்கு தொழில் வளர்ச்சியும் ஏற்படாது.

துணைத் தலைவர்:- நீங்கள் பேசி முடியுங்கள்.

சி. என். ஏ.

பூபேஷ்குப்தாவின் ஆலோசனைக்கு நான் மிகுந்த கவனம் செலுத்துகிறேன். எவ்வளவுக்கெவ்வளவு ஜனநாயக முறையில் இருக்க முடியுமோ அப்படி இருக்க முயற்சிக்கிறோம். ஆனால், அதேபோல நடந்து கொள்ளும் என்று நான் கம்யூனிஸ்டு கட்சியிடம் எதிர் பார்க்கவில்லை.

பூபேஷ்குப்தா:- நாங்கள் முழுக்க முழுக்க ஜனநாயக வாதிகள். உங்கள் யோசனையை நான் ஏற்றுக் கொள்கிறேன். நல்ல யோசனை யாரிடமிருந்து வந்தாலும் ஏற்றுக் கொள்வதிலே தவறில்லை. ஆனால், என் யோசனையை ஏற்றுக்கொண்டு, திராவிட நாடு முழக்கத்தை, இந்தியாவிலிருந்து பிரிவது என்ற கோஷத்தை விட்டுவிடுவாரா? துணைத்தலைவர் அவர்களே! நான் அவருடைய யோசனையை ஏற்றுக்கொண்டிருக்கிறேன்.

துணைத்தலைவர்:- காலம் மிகவும் குறைவாக இருக் கிறது. தயவுசெய்து முடித்துக்கொள்ளுங்கள்.

மொரார்ஜி தேசாய்:- அடிக்கடி எழுந்திருந்து மற்றவர் களின் நேரத்தை பூபேஷ்குப்தா எடுத்துக்கொள் கிறார். அவர் தமது நேரத்தைச் செலவிட்டுவிட் டார். ஏன் அடிக்கடி எழுந்து நிற்கிறார்?

பூபேஷ்குப்தா:- தி. மு. க. ஸ்லோகங்களில் அவருக்கு மிகுதியாக அனுதாபம் இருப்பதுபோல் தெரி கிறது.

சி. என். ஏ:-

துணைத்தலைவர் அவர்களே! நேரம் போதவில்லை; இல்லையென்றால், இதுபற்றி விவாதித்துக்கொண்டே போகலாம், ஆனால் பிரச்சினைகளை இம்மாதிரியான முறையில் தீர்த்துவிட முடியும் என்று நான் கருத வில்லை. பிரதேச ஏற்றத்தாழ்வு இருக்கிறது என்பது பற்றி, எல்லா அரசியல் கட்சியினரிடமும் மனக்குறை உண்மையிலேயே இருக்கிறது என்பதை விளக்கிக் காட்ட முற்படுகிறேன். இதனை நான் எடுத்துக்காட்டு வது, பிரிவினைக்கு ஆக அல்ல. ஒரு சீரான பொரு ளாதார வளர்ச்சி இல்லாததால் நாட்டிலே மொத்தத் தில் கிடைக்கக்கூடிய செல்வ வளர்ச்சி கிடைக்க வில்லை என்பதை எடுத்துக்காட்ட இதனைக் கூறு கிறேன். அதுதான் என்னுடைய குறி. பிரிவினைக்காக வேறு பல காரணங்கள் இருக்கின்றன. ஆனால் அவைபற் றிப் பேசிப் பேச்சை வேறு திசை கொண்டு செல்ல விரும்பவில்லை. ஒரு அங்கத்தினர் அப்படித் திசை தவறிச் சென்று, என்னைச் சிலோன் போய்ப் பிரசாரம் செய்யும்படிகூட விந்தையாகக் கூறி இருக்கிறார்! அவ ருக்கு என்னிடம் அதிகமான பற்றும் பாசமும் இருக் கிறதா, அல்லது சிலோன் நாட்டிடம் பற்றுப் பாசம் இருக்கிறதா என்று தெரியவில்லை. எப்படி இருப்பி னும் அவர், தாம் ஒரு திராவிடர் என்பதை ஒப்புக் கொண்டார். நான் பேச்சின் திசையைத் திருப்பிவிடப் போவதில்லை. ஆனால், திட்டவட்டமாக ஒன்று கூறுவேன், எரிகுண்டு, இழிமொழி எதுவும் என்னை நான் ஏற்றுக் கொண்டுள்ள புனிதப் பணியிலிருந்து தடுத்து நிறுத்தப் போவதில்லை. அதுகுறித்து பேரப்பேச்சுக்கு இடமே இல்லை. எனவே நான் பேச்சின் திசையைத் திருப்பப்போவ தில்லை. பிரதேச ஏற்றத்தாழ்வுப் பிரச்சினைக்கு வரு வோம். பிரதேச ஏற்றத்தாழ்வு இருக்கிறது என்பதற்கு, பொருளாதார கண்ணோட்டத்தின்படி ஒரு சுவையான தகவல் தருகிறேன். வருமானவரி நிலுவைகளைப்பற்றிக் குறிப்பிட்டேன். இராஜ்யவாரியாக அல்லது வட்டார வாரியாக அந்தத் தகவல் தரப்பட்டிருக்கிறது. பம்பாய் நகரம் (1) பம்பாய் நகரம் (2) மத்திய பம்பாய் சேர்ந்து 36-கோடி ரூபாய் நிலுவை; மேற்குவங்கம், கல்கத்தா நகரம் உட்பட, 43-கோடி ரூபாய் நிலுவை! எனவே மிகப் பெருந்தொகை நிலுவையாக உள்ள அந்த இரண்டு பிரதேசங்களின்பேரிலும், நிதி அமைச்சர் தமது துப்பாக்கியைத் திருப்பவேண்டும்.

புபேஷ் குப்தா:- மேற்கு வங்கத்தில் பெரிய முதலாளிகள் இருக்கிறார்கள். சாந்தி பிரசாத் ஜெயின் என்பவர், சமீபத்தில் 60 இலட்ச ரூபாய் விலையில் ஒரு வீடு வாங்கினார்.

சி. என். ஏ:-

மேற்கு வங்கத்தில் உள்ள முதலில், பெரும்பகுதி வெளி இடத்திலிருந்து வந்தது. பொருளாதார ஏற்றத் தாழ்வு, இராஜ்யத்துக்கு இராஜ்யம் உள்ள விவசாயத் துறை வருமானப் புள்ளிவிவரத்தைப் பார்த்தால்கூடப் புரியும். 1958—59ம் ஆண்டில், சென்னையில் எங்க ளுக்கு 343·3 கோடி ரூபாய் கிடைத்தது, உத்தர பிரதேசத்துக்கு 1,146 கோடி ரூபாயும், மேற்கு வங்கத் துக்கு 427 கோடி ரூபாயும் கிடைத்துள்ளன. உத்தர பிரதேசமோ மேற்கு வங்கமோ வளம் கொழிக்கும் செல்வ பூமியாவதை நான் குறைகூறவில்லை. ஆனால்,

அதிகாரத்தாரின் பார்வை தெற்கே செலுத்தப்படுவதில்லை!

திட்டங்களை நிறைவேற்றியதில், முறைகேடான, சீரற்ற பொருளாதார ஏற்பாடுகள் மேற்கொள்ளப் படாமலிருந்திருந்தால், விவசாயத்துறையில், உத்தரப் பிரதேசத்தைவிட மிக அதிகமான வருவாய் நாங்கள் பெற்றிருக்கமுடியும். இப்போதுகூட எங்களுக்கு ஒரு பக்ரா-நங்கல் இல்லை, சிறிய நீர்ப்பாசன திட்டங்களும் அதிகம் இல்லை, என்றாலும் இந்தியாவிலேயே தமிழ் நாட்டிலேதான், ஏகர் ஒன்றுக்கு அதிகமான விளைச்சல் ஆகிறது.

எஸ். சென்னரெட்டி:- உங்களுக்குக் குந்தாதிட்டம்இருக் கிறது.

சி. என். ஏ:-

அது பாசனத்துக்காக இருப்பதைவிட, மின்சார உற்பத்திக்காகத்தான் பெரிதும் இருக்கிறது. அத் தகைய உதவிகளின்றி, எமது விவசாய உற்பத்தி வளர்ச்சி அடைந்திருக்கிறது. அப்படிப்பட்ட கடுமை யாக உழைக்கத்தக்க, புத்திகூர்மையுள்ள, விஷயங் களை ஆராய்ந்து அறிந்துகொள்ளும் பக்குவம் உள்ள உழவர்கள் இங்கு இருக்கும்போது, விவசாயத் துறைக் கான திட்டம் தீட்டியபோது, தெற்குப் பகுதிமீது பார்வை சென்றிருக்கவேண்டாமா? தெற்கே, மீன் பிடித் தொழிலை வளர்ச்சி அடையச் செய்திருக்கலாம். போக்குவரத்துச் சாதனத் துறையிலே வளர்ச்சி கண் டிருக்கலாம்... எத்தனையோ உள்ளன செய்வதற்கு. எவ்வளவோ வாய்ப்புகள் உள்ளன. வாய்ப்புகளைப் பயன்படுத்தத் தவறிவிட்டது மட்டுமல்லாமல், பிரச் சினையை எடுத்தாலே, பிரச்சினையைத் தள்ளிப்போட முற்பட்டார்கள். அப்படிப்பட்ட பிரச்சினைகளை எழுப் பியபோது, எங்கு மூலப்பொருள்கள் கிடைக்கின்றன வோ, அங்குதான் தொழில்திட்டம் அமைக்கமுடியும், அதுதான் கண்டிப்பான பொருளாதார தத்துவம் என்று கூறிக்கொண்டுவந்தார்கள். ஆனால், இப்போது தான், இனிப் பிரதேச ஏற்றத்தாழ்வினை ஒழித்தாக வேண்டும் என்ற கொள்கையை ஒப்புக்கொண்டிருக் கிறார்கள். சபையினர் அறிந்துகொள்வதற்காக, ஒன்று கூறுகிறேன், இதுபோன்றதோர் பிரச்சினை இத்தாலி யில் எழுந்தது. வட இத்தாலியுடன் ஒப்பிட்டுப் பார்க் கும்போது தெற்கு இத்தாலி தொழில் வளர்ச்சியில் மிகவும் பிற்போக்காக இருந்தது. இத்தாலிய சர்க்கார் அறிவுத் தெளிவும் துணிவும் மிக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டார்கள். தெற்கு இத்தாலிக்கு எனத் தனியான திட்டங்கள் வகுத்தார்கள். இத்தாலியின் தெற்குப்பாகத்தை வளமாக்க, உதவித்தொகை, கடனுதவி ஆகிய சலுகைகளை வழங்கினார்கள். நான் உங்களை வசீகரமான பாதைவழியே அழைத்துச் செல்வதாக எண்ணுகிறீர்கள். அவ்வழியே சென்று, திரும்பிப்பார்த்து நாங்கள் இத்தாலி கையாண்ட முறைகளை முன்மாதிரியாகக் கொள்கிறோம் என்று கூறப்பார்க்காதீர்கள். நீங்கள் அந்த முறையைப் பின்பற்றக்கூடும். அந்த முறையைப் பின்பற்ற வேண்டாம் என்று நான் உங்களுக்குக் கூறவில்லை- பின் பற்றி நடவுங்கள். ஆனால், அதனால் சமாதானமாகி, எனது அரசியல் கட்சி தனது அரசியல் தத்துவத்தை விட்டுக் கொடுத்துவிடும் என்று நான் உத்தரவாதம் தரமுடியாது, தரத் தேவையில்லை, தரமாட்டேன். அதனுடைய தத்துவம் பேரப்பேச்சு, சலுகைகள் பெறுவது போன்றவைகளிலிருந்து முற்றிலும் வேறானது. தெற்குப் பகுதியின் பொருளா தாரத்தைச் சரியானபடி கவனித்திருந்தால் இந்நேரம், செல்வம் மிகுதியாக உற்பத்தி செய்திருக்கமுடியும் என்பதைமட்டுமே நான் சுட்டிக்காட்டுகிறேன். உலகி லேயே மிகச் சிறந்ததோர், கடலோரம் தெற்கே இருப் பது. துறைமுகங்கள் நிரம்ப! பயன்பட்டுக்கொண்டு வருபவை, பயன்படாமலிருப்பவை, உள்ளன. என் மதிப்புமிக்க நண்பர் தாயாபாய் படேல் கோபத்துக்கு வரமாட்டார் என்று நம்புகிறேன், அவருக்குக் கண்டலா துறைமுகம் கிடைத்துவிட்டது, எமக்கோ இன்னமும் தூத்துக்குடி துறைமுகம் அமைக்கப்பட்டாகவில்லை. வணிகர் சங்கக் கூட்டத்தில் பேசும்போது எங்கள் இராஜ்ய தொழில் மந்திரி, இரண்டு நாட்களுக்கு முன்பு திட்டங்களை ஏற்றுக்கொள்வதாகக் கூறிவிட்டால் போதாது, இந்திய சர்க்கார் நடவடிக்கைகளில் ஈடு பட்டுக் காரியத்தை விரைவுபடுத்தவேண்டும் என்று கூறி இருக்கிறார். எனவே, பொருளாதார சீரமைப்பு நாடெங்கும் ஏற்பட்டிருக்குமானால், குறிப்பாகப் புறக் கணிக்கப்பட்டுக் கிடக்கும் தெற்குப் பகுதியில் ஏற்பட் டிருக்குமானால், வரி செலுத்தும்படி அமுல் செய்யும் போது, அவ்வளவு கடினமாகத் தோன்றாமல் இருந்திருக் கும். நான் இந்தப் பிரச்சினையில், வரிசெலுத்தும் முறை பற்றி மட்டுமே இப்போது கூறுகிறேன். தன் பிரதேசத்துக் காகக்கூட அல்ல, வேறு பிரதேச வளர்ச்சிக்காக, தன்மீது வரி சுமத்தப்படுகிறது என்று தெற்கு உணருகிறது; உணரு வதால், வரிக்கொடுமை இரட்டிப்பு மடங்காகத் தெரிகிறது. எனவே நிதி அமைச்சருக்கும் அவர் மூலம் மற்ற அமைச்சர்களுக்கும் எமது வேண்டுகோள் என்ன வென்றால், செல்வவளர்ச்சி அதிகப்படவும், வரிவிதிப்பு புக் குறையவும் ஏற்றவிதமாகத் தென்னகத்தைப் பொருளாதாரத் துறையில் எப்படித் திருத்தி அமைப்

கள்ளமார்க்கட் கொட்டம் அடிக்கிறது!

பது, சீர்படுத்துவது என்பதுபற்றி வழி காணவேண்டும் என்பதாகும்.

ஆளுங்கட்சியினர் மற்ருேர் தவருன கருத்து ஏற்படச் செய்து வருகின்றனர். இப்போது இலாபத்தைப் பங்கிடுவதுபற்றி, பிரித்துக்கொடுப்பதுபற்றிப் பேசாதீர்கள். உற்பத்தியைப் பெருக்குங்கள், உற்பத்தியைப் பெருக்குவது உமது கடமை. எனவே, மேலும் மேலும் உற்பத்தியைப் பெருக்குங்கள். பகிர்ந்துகொள்வதுபற்றி இப்போது பேசாதீர்கள், ஏனெனில் பகிர்ந்துகொள்வது என்பது, உற்பத்தி முடிந்த பிறகுதான் இயலும் என்று பேசுகிருர்கள். பொருளாதார பாட புத்தகங்களிலேதான், முதல் அத்தியாயம் உற்பத்தி, இரண்டாவது அத்தியாயம் விநியோகம் என்று இருக்கும் என்பதைக் கூற விரும்புகிறேன். ஆனல், நடைமுறையிலே, உற்பத்தி செய்துகொண்டிருக்கும்போதே விநியோகமும்நடந்துகொண்டுதானிருக்கும். உற்பத்தி செய்துமுடித்துவிட்டு, எல்லாவற்றையும் குவியலாக ஒரு இடத்தில் கொட்டிவைத்தான பிறகு,ஒரு நல்ல நாளில், இனி விநியோகிக்கலாம் என்று நாம் கூறுவதில்லை. பொருளாதார நடவடிக்கைகள் அந்த முறையிலே செயல்பட்டுக் கொண்டில்லை. பொருளாதார பாட புத்தகங்கள் எழுத மட்டுமே அது முறையாகக் கொள்ளப்படுகிறது. எனவே, ஆளுங் கட்சியினர் அத்தகைய சொத்தைக் காரணத்தைக் காட்டக் கூடாது. இந்தப் புறத்திலுள்ள நாங்கள், உற்பத்தி செய்யப்படுவது, சரியான முறையில் பகிர்ந்தளிக்கப் படவில்லை என்று கூறுகிருேம். பண்டங்கள் சரியான முறையிலே விநியோகமாகியிருந்தால், செல்வம் சரியானபடி பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தால், நமது நாட்டில், இவ்வளவு வறுமை இருந்திருக்காது. வறுமை எந்த அளவு இருக்கிறது என்ருல், அனதைகளாக உள்ள முதியவர்களுககு எங்கள் இராஜ்யத்தில் உதவித் தொகை தரப்படவேண்டி ஏற்பட்டிருக்கிறது. எனது இராஜ்ய சர்க்கார் அப்படி ஒரு ஏற்பாடு மேற்கொண்டிருப்பது எனக்கு மகிழ்ச்சி தருகிறது என்ருலும், அது எங்கள் பகுதியிலே உள்ள தரித்திரத்தைக் காட்டும் குறியாக இருப்பதனையும் கூறவேண்டி இருக்கிறது. இத்துணை செல்வம் உற்பத்தி செய்யப்பட்ட பிறகும் இவ்வளவு வறுமை இருக்க காரணம் என்ன? காரணம் என்னவென்ருல், பகிர்ந்தளிக்கும் பிரச்சினைமீது சரியான முறையில் அக்கரை செலுத்தப்படவில்லை. ஆகவேதான், செல்வம் வளருகிறது; புதிய புதிய காடிலாக் கார்களும், புதிய புதிய மாளிகைகளும், புதிய புதிய தொழிலகங்களும் காண்கிருேம். சர்க்காருக்கே தேவைப்படும் அளவு சிமிட்டி கிடைக்காதபோது, தனிப்பட்ட கண்ட்ராக்டர்களுக்கு எவ்வளவு அளவுக்கு வேண்டுமானுலும் சிமிட்டி கிடைப்பது தமக்குத் தூக்கி வாரிப் போடுவதாக இருக்கிறது எனப் பிரதம மந்திரி பேசியதாக அன்ருேர் நாள் பத்திரிகையில் பார்த்தேன். கள்ள மார்க்கட், கருப்புப் பணம்—என்ற இரண்டு வார்த்தைகள்புழக்கத்திலிருக்கிறதே, இந்தநிலை இந்தத்தேசிய சர்க்காருக்கு அவமானகரமானது என்று கூறவிரும்புகிறேன் — அவமானகரம் என்ற பதம், மிகக் கடினமானதோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. இந்தப் பதங்களை மிகச் சாதாரணமாக நாம் உபயோகப்படுத்துகிருேம். எந்தப் பண்டத்தைப் பற்றியாவது பேச்சு எழும்போது, அங்காடியில் என்ன விலை? கள்ள மார்க்கட்டில் என்ன விலை? என்று கேட்கிருேம். இரும்புச்சாமான் கள்ளமார்க்கட்டில் என்ன விலைக்கு விற்கப்படுகிறது என்பது தமக்கு மிக நன்ருகத்தெரியும் என்று மந்திரிசபையினர் ஒருவர் பேசியதாகப் பத்திரிகையிலே பார்த்தேன் — திடுக்கிட்டுப்போனேன், சொன்னவர் இப்போதுள்ள இரும்புமந்திரி அல்ல. எனவே, கள்ளமார்க்கட் இருப்பது சர்க்காருக்குத் தெரியும், கள்ளமார்க்கட் எப்படி நடத்தப்படுகிறது என்பதும் தெரியும். ஆனல் அந்தக் கள்ளமார்க்கட்காரர்மீது நடவடிக்கை எடுத்துக் கூண்டில்கொண்டுவந்து நிறுத்திஞல், தேர்தல்களில் தீர்த்துக்கட்டிவிடுவார்கள் என்பதும் சர்க்காருக்குத் தெரிகிறது. ஆகவேதான், கள்ளமார்க்கட் கொட்டம் அடிக்கவிடப்பட்டிருக்கிறது. கள்ளமார்க்கட் இருக்கும்போது, கருப்புப் பணம் உண்டாகிறது, இந்தக் கருப்புப் பணத்தைத்தொழிலுக்கு முதலாகப்போட முடிவதில்லை. தனிப்பட்ட ஒரு அமைப்புக்குத் தொழிலிலே இலாபம், வெளிப்படையாகக் கிடைத்தால், அந்தப் பணத்தை வேறு வியாபாரத்தில் கொண்டுவந்துபோடலாம். ஆனல் கணக்கிலே காட்டப்பட முடியாத கருப்புப் பணம் கிடைக்குமானல், அதனைத் தொழிலிலே கொண்டுபோய்ப்போடமுடியாது. ஆகவே, அந்தப்பணம் டம்பாச்சாரி வாழ்வுக்குச் செல்வாகிறது, இத்தகைய டம்பாச்சாரி போக்கைத் தடுக்கவேண்டும் என்றுதான் அந்த நிதிமந்திரி, செலவு வரி விதித்தார். ஆனல், இன்றுள்ள நிதிமந்திரி, டம்பாச்சாரி செலவு மட்டுப்பட்டுவிட்டது என்பதாலோ, அல்லது டம்பாச்சாரிப்போக்கு நல்லது என்பதாலோ, செலவு வரியை எடுத்துவிட்டார். அ னல் அதிகமான வருவாய் கிடைக்காமல் இருந்திருக்கலாம். 77-இலட்ச ரூபாய்தான் கிடைத்ததாகத் தெரிகிறது— பத்திரிகைச் செய்திகளிலிருந்து. ஆனல் தொகை எந்த அளவாக இருப்பினும், அந்த வரிக்கு அடிப்படையாக அமைந்திருந்த சமுதாயக் கருத்து முக்கியமானது—எனினும் அந்த வரியை இவர் நீக்கிவிட்டார், அதற்கு மாருக, கிரசின், தீப்பெட்டி, புகை

பதிவு எண். எம். 4642 | தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

வரிபோட்டு மக்களைக் கசக்காதீர்கள்!

யிலே! இவைகள்மீது உள்ளவரிகளை மேலும் மேலும் அதிகமாக்கி இருக்கிறார். அன்றுநிதி அமைச்சர், லோக் சபையிலே......

துணைத்தலைவர்:- ஐந்து நிமிடம் வேண்டுமெனக் கேட்டீர்கள்—ஆனால் பத்து நிமிடங்களுக்கு மேல் எடுத்துக்கொண்டுவிட்டீர்கள்.

சி· என். ஏ.

இன்னும் ஒரு இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.

துணைத்தலைவர்:- தயவுசெய்து முடித்துவிடுங்கள், ஏனெனில் குறுகிய கால அளவே இருக்கிறது.

சி. என். ஏ:-

அன்று லோக் சபையில் நிதி அமைச்சர் ஒரு தீப் பெட்டியை எடுத்துக்காட்டி, இதோ வத்திப்பெட்டி, இதனை நியாயமான விலைக்கு வாங்கி இருக்கிறேன் என்று கூறினார். இப்போது போய் வாங்கும்படி நான் அவரைக் கேட்டுக்கொள்கிறேன். இப்போது வத்திப் பெட்டியின் விலையும் ஏறிவிட்டது, மற்ற எல்லாச் சாமான்களின் விலையும் ஏறிவிட்டது, ஏனெனில் **கான்யூட்** மன்னனைப்போல, நிதி அமைச்சர் விலைகள் ஏறாது என்று கூறினார் என்றாலும், கான்யூட் முன்னர் கடல் அலை ஓய்ந்துவிடவில்லை, விலைகளும் நிதி மந்திரியாரின் பேச்சினால் ஏறாமல் நின்றுவிடவில்லை. எந்தெந்தச் சமயத்தில் வரி போடப்படுகிறதோ அப்போதெல்லாம் விலைகள் ஏறிவிடத்தான் செய்யும். விலைவாசி ஏற்றத்தை இந்தச் சர்க்கார் கட்டுப்படுத்த முடிந்தாலாகிலும், புதிய வரிகளுக்கு அதனைக்காரணமாகக் காட்ட முடியாவிட்டாலும், மறைமுகவரி போடப்படுவதற்கு மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ள வசதியாகவாவது இருந்திருக்கும். எனவே, இந்த வரி மசோதா, ஒரு கசக்கிப் பிழியும் திட்டமாகும். கம்பளி செய்வதற்காக, ஆடுகளின் ரோமத்தை வெட்டி எடுக்கிறார்கள், புரிகிறது, ஆனால் நீங்கள் மக்களைக் கசக்கிப்பிழிகிறீர்கள், ஏழைகளைக் கசக்கிப் பிழிகிறீர்கள், திட்டத்தின் பெயரால் ஏழைகளைக் கசக்கிப் பிழிகிறீர்கள், அதனால், மக்கள் திட்டத்தையே மிரட்சியுடன் பார்க்கச்செய்து விட்டீர்கள். மக்கள் திட்டம் வேண்டும் என்கிறார்கள், ஆனால், திட்டம் காரணமாகத்தான் இந்த வரிகளெல்லாம் போடவேண்டி இருக்கிறது என்று நீங்கள் கூறும்போது, மக்கள் வரிகளை மட்டும் கண்டிக்கவில்லை, திட்டத்தின் அவசியம் பற்றியே சந்தேகப்படத் தொடங்குகிறார்கள். எனவே, ஒரு விதத்தில் எந்தத் திட்டத்துக்கு நீங்கள் கட்டுப்பட்டிருக்கிறீர்களோ, அதே திட்ட ஏற்பாட்டையே நீங்கள் குலைத்து விடவும் செய்கிறீர்கள். வாதங்கள், இடையிடையே புள்ளிவிவரங்களை வைத்து அடைத்த மறுப்புரைகள் ஆகியவற்றை நீட்டி முழக்கவேண்டாம், வறுமையில் நெளியும் மக்கள், அவர்கள் படும்பாடு, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவைகளைக் கருத்தில் கொள்ளுங்கள் என்று நிதி அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன். வரி செலுத்தக்கூடிய சக்தியின் கடைசிக் கட்டம் வந்தாகிவிட்டது. எனவே மறைமுக வரிகளை, அதிலும் அத்தியாவசியப் பண்டங்களின்மீது விதிக்கப்பட்டுள்ள மறைமுக வரிகளை நீக்கி விட்டு, வேறு இடத்திலிருந்து பணம் தேடிக்கொள்ள முற்படுங்கள். இந்த வரிகள் எல்லாம் நீக்கப்பட்டுவிட்டாலும் அவருக்கு நிரம்ப வருவாய் கிடைக்க இருக்கிறது என்று உறுதி கூறுகிறேன். ஏனெனில் எப்போது வரவு செலவு திட்டத்தைக் கொடுத்தாலும், வருவாய் வரக்கூடியது என்று தரப்படும் புள்ளியைக் குறைவாகவே தருவது வாடிக்கை; பிறகு சபையிலே மந்திரவாதிபோல் எழுந்து நின்று நான் 23 கோடிதான் கிடைக்கும் என்று எதிர் பார்த்தேன், ஆனால் 32 கோடி கிடைத்தது என்று பேசுவார். ஆகவே இத்தகைய மறைமுக வரிகளுக்கு அவசியம் இல்லை; மக்களைக் கசக்கிப் பிழிய வேண்டியதில்லை என்று கூறுகிறேன்.

❋

தம்பி!

இன்னும் என்னென்னவெல்லாமோ சொல்ல வேண்டுமென்று நினைத்தேன். நேரம் இல்லை. சரி! அடுத்தடுத்து அவைகளை உன்னிடம் கூறி, என் கடமையை நிறைவேற்றி களிப்புத்தேடிக்கொள்கிறேன்.

கடமையாற்றுவதிலே தன்னிகரற்ற திறமும் காட்டிடும், தம்பி! 30-ந்தேதிதான் முழக்கம் எழுப்பப்போகிறாயே, விலை ஏற்றம், வரிப்பளு இவைகளைக் கண்டித்து, சட்டமன்றத்துக்கு எதிரே.

கோட்டைக்கு எதிரே அணிவகுப்பு! கடலலையின் ஒலிக்கும் உன் முழக்கத்துக்கும் கடும்போட்டி! பார்ப்போம், ஆளவந்தார்கள் மனம் மாறுகிறதா என்று.

அண்ணன்,

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.